உ

திருச்சிற்றம்பலம்.

ஆதித்தபுரமென்னும்

# திருக்கருப்பறியலூர்த் தலபுராணம்.

மருதூர்
அம்பலவாணரால்
இயற்றப்பட்டது.

இஃது

ஷை திருக்கருப்பறியலூர்த் தலத்திலுள்ள
சிவநேசச் செல்வர்கள்
வேண்டுகோளின்படி

திருக்கைலாய பரம்பரை
தருமபுரம் ஆதீனத்து அடியார் குழாங்களுள் ஒருவராகிய
சுப்பிரமணியசுவாமி அவர்களாற்
பார்வையிடப்பட்டு

திருநெல்வேலிப் பாலம்
ஆரியப்பிரகாசினி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

1912

*Registered Copy-Right.*] [இதன் விலை அணா 6

உ

# முகவுரை.

அநாதியே பாசங்களில் நின்று நீங்கிய பரமபதியாகிய சிவபெருமான் ஆன்மாக்களுய்யும்பொருட்டு இவ்வுலகத்தின்கண் மூர்த்திதலம் தீர்த்தமென்னும், மூவகைப் பகுப்புடையவராய் நிறைந்து நின்றனர். அவ்வாறு நிறைந்துள்ள தலங்கள் பலவுளவேனும் சைவசமயாசாரிய சுவாமிகளாற்றுதித்துப் பாடப்பெற்ற தலங்களையே மிகமுக்கியமானவையென்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்பது ஒருதலை.

மேற்கூறிய தேவாரம் பெறப்பெற்ற தலங்கள் சோழவளநாட்டிற் காவிரிக்கிருபாலும் அமையப்பெற்றுள்ளன அத்தலங்களுள் காவிரியின் வடபாகத்திற் சிறப்புற்றோங்கிய திருக்கருப்பறியலூரென்னும் ஓர் திவ்விய க்ஷேத்திரமுண்டு. இத்திவ்விய க்ஷேத்திரத்துக்கு மேல்பாலும் வடபாலும் விநாயக நதி என்று ஓர் நதி புடைசூழ்ந்து செல்லுகின்றது.

இத்தலத்திற்கு யூதிகாவனம், கன்மநாசபுரம், ஆதித்தபுரம், கருப்பறியலூர், மேலக்காழி, என்னும் காரணத்திருநாமங்கள் பலவுள்ளனவாயினும் வேதங்களால் விதந்தெடுத்தோதப்பட்ட பரஞானத்தையருளிப் பிறவியை நீக்கலாற் கருப்பறியலூர் என்னுந் திருநாமமே மிகச் சிறந்ததுபற்றி, சமயாசாரிய சுவாமிகளால் இப்பெயரினை நாட்டியே திருப்பதிகங்கள் அருளிச்செய்யப்பெற்றன. இத்தலத்துள் புண்ணியஞ்செய்வோர் பரகதி எளிதிற் பெறுவரென்பதற்கையமில்லை. இத்தகைய மெய்த்தலத்தில் எவர் மரிக்கினும் உமைபாகனாகிய பரமசிவம் உண்மைத்தாரக மந்திரத்தை மரிப்பவர் வலக்காதினில் (இக்கலியுகத்தினும்) உபதேசஞ்செய்வரென்றால் இத்தலத்துக்குச்சமமாக வேறொரு தலமுண்டெனக் கூறுவதெங்ஙனம். அன்றியும் இத்தலத்தினது பெருமையைப்பற்றி உமாதேவியாருக்குச் சிவபிரான் அருளியவண்ணம் நான்முகன் வசிட்டமாமுனிவருக்குச் சொல்ல, அவர் சூதருக்கும். அவர் நைமிசாரணிய முனிவர்களுக்கும் உரைத்தனரென்றாலதன் பெருமையை ஒன்றுக்கும் பற்றாத யாம் பேசல் சாலுமோ.

இத்தலத்தின் மேன்மை பதினெண் புராணங்களிலொன்றாகிய பிரமாண்ட புராணத்திற் கூறப்பெற்றுள்ளது. இப்புராணம், தலச்சருக்க முதலிய எழு சருக்கங்களால் நிரம்பியுள்ளன. அச்சருக்கங்களிற் சொல்லியவற்றை அவ்வத்தலப்பின் கீழ் நன்கு காணலாம்.

இப்புராணம் சுமார் (உ௱௦)வருடங்களுக்குமுன் திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் பத்தாவது குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவஞானதேசிக மகா சன்னிதானத்தின் திருவருள் பெற்ற மருதூர்

அம்பலவாணர் என்பவர் ஒருவரால் தமிழில் இயற்றப்பட்டதாய்ச் சிறப்புப்பாயிரத்தானும், குருதோத்திரத்தானும் நன்கு விளங்குகின்றது.

இத்தலத்துக்கு ஈசானபாகத்தில் அநுமாரால் தாபிக்கப்பட்ட சிவலிங்கம் ஒன்று விளங்குவதால் அத்தலத்திற்குத் திருக்குரக்குக்காவென்னுந் திருநாமஞ் சாற்றப்பெற்று திருநாவுக்கரசுசுவாமிகளால் தேவாரப்பதிகமும் பாடப்பெற்றுள்ள அத்தலப்பெருமையும் இப்புராணத்துட்கூறப்படுவதுபற்றியத்தலத் திருப்பதிகமும் இத்தலப்பதிகத்துடன்சேர்க்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய அரிய சிறிய புராணத்தை அச்சியற்றுவதற்காக கிடைத்த பிரதிகளிரண்டையுமிருந்தவாறு கடிதத்திலெழுதி ஒருவாறு ஒப்புநோக்கி பரிசோதித்து விரைவில் வெளியிடப்பட்ட புத்தகத்திற் பிழைகளிருப்பின் அவைகளை எமக்குத் தெரிவிப்பாராயின் அவர்களுக்கு மிக நன்றியறிதலையுடையவனாகயிருப்பேன்.

சில பாடல்களுக்கு உரை நன்கு விளங்கவில்லையாயினும் என் சிற்றறிவுக்கெட்டியவாறு ஒருவாறாக சில பதங்களுக்கு உரையெழுதி அரும்பதவுரையென்று இத்துடன் சேர்த்துள்ளேன்.

இத்தலம் தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமானதால் சிவாலய விசாரணைக்கித்தமியேன் சென்றிருந்தகாலத்தில் இத்தலத்தின் அருமை பெருமைகளைக் கருதி இத்தலபுராணத்தை வெளியிடவேண்டுமென்கிற எண்ணம் என்னகத்துதிக்க அவ்வழியே சென்று வெளியிட்டனன்.

இப்புராணத்தை ஒப்பு நோக்குங்கால் எனக்கு மிக உதவிபுரிந்துநின்ற திருநெல்வேலி ஸ்ரீமாந் கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்களுக்கும், தருமபுரம் ஆதீன சிஷ்யரும் வித்வசிகாமணியுமான ஸ்ரீமாந் S. பால்வண்ண முதலியாரவர்களுக்கும், இப்புராணத்தை அச்சிடுவதற்கியன்றவரை பொருளுதவி செய்வதாய் வாக்களித்த * திருக்கருப்பறியலூர்ச் சிவநேசச்செல்வர்களாகிய மக-ா-ா-ஸ்ரீ குப்புசாமி பிள்ளையவர்களுக்கும் பிரதிகளுதவிய மக-ா-ா-ஸ்ரீ சாமிநாதபிள்ளையவர்களுக்கும்,மக-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணபிள்ளையவர்களுக்கும் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்புராணம் குற்றம்பொறுத்தவர் பெருமையைக்கூறுமாற்றால் அறிவுடையோர் சிறிதும் கல்வியறிவில்லாத என்னால் நேரிடுங் குற்றம் பொறுப்பாராக.

இங்ஙனம்,

**தரு. ஆ. சுப்பிரமணியத் தம்பிரான்.**

---

* இத்தலம், வயித்தீஸ்வரன்கோயில் ரயில்வேஸ்டேஷனிலிறங்கி மேற்கே செல்லுகின்ற மண்ரோட்டு மார்க்கத்தில் (6,வது மயிலிலிருக்கின்றது.

# திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம்.

திருவிராகம்

பண்—இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

(க) சுற்றமொடுபற்றவைதுயக்கறவறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கண்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே.

(உ) வண்டணைசெய்கொன்றையதுவார்சடைகண்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினோடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவோரம்பாற்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே.

(ங) வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முன்னாடுகுழைதாழுங்
காதவனிருப்பதுகருப்பறியலூரே.

(ச) மடம்படுமலைக்கிறைவன்மங்கையொருபங்க
னுடம்பினைவிடக்கருதிநின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலாற்
கடந்தவனிருப்பதுகருப்பறியலூரே.

(ரு) ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
நிருத்தனவனீதியவனித்தனெறியாய
விருத்தனவன்வேதமெனவங்கமவையோதுங்
கருத்தவனிருப்பதுகருப்பறியலூரே.

(சா) விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகண்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினாளையணைவிப்பா
னெண்ணிவருகாமனுடல்வேவவெரிகாலுங்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே.

(எ) ஆதியடியைப்பணியவப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளர்க்குவடுபுக்குத்
தீதுசெயவந்தணையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதுகருப்பறியலூரே.

(அ) வாய்ந்தபுகழ்விண்ணவருமண்ணவருமஞ்சப்
பாய்ந்தமர்செயுந்தொழிலிலங்கைநகர்வேந்தற்
கேய்ந்தபுயமத்தனையுமிற்றுவிழவேனுட்
காய்ந்தவனிருப்பதுகருப்பறியலூரே.

(௯) பரந்ததுநிரந்துவருபாய்திரையகங்கை
கரந்தொர்சடைமேன்மிசையுகந்தவளைவைத்து
நிரந்தரநிரந்திருவர்நேடியறியாமற்
கரந்தவனிருப்பதுகருப்பறியலூரே.

(௧௦) அற்றமறையாவமணராதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொலைவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொகுடிக்கோயிற்
கற்றெனவிருப்பதுகருப்பறியலூரே.

(௧௧) நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்ளைப்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

## தேவாரம்.

பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

(௧) சிம்மாந்துசிம்புளித்துச்சிந்தையினில்வைத்துகந்துதிறம்பாவணணங்
கைம்மாவினுரிவைபோர்த்துமைவெருவக்கண்டானைக்கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின்மலர்ச்சோலைக்குயில்பாடமயிலாடுங்கொகுடிக்கோயி
லெம்மானைமனத்தினுனினைந்தபோதவர்நமக்கினியவாறே

(௨) நீற்றுருமேனியராய்நினைவார்தமுள்ளத்தேநிறைந்துதோன்றுங்
காற்றானைத்தீயானைக்கதிரானைமதியானைக்கருப்பறியலூர்க்
கூற்றானைக்கூற்றுதைத்துக்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயி
லேற்றானைமனத்தினுனினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௩) முட்டாமேநாடோறுநீர்மூழ்கிப்பூப்பறித்துமூன்றுபோதுங்
கட்டார்ந்தவிண்டைகொண்டடிசேர்த்துமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொட்டாட்டுப்பாட்டாகிநின்றானைக்குழகனைக்கொகுடிக்கோயி
லெட்டானமூர்த்தியைநினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௪) விருந்தாயசொன்மாலைகொண்டேத்திவினைபோகவேலிதோறுங்
கருந்தாளவாழைமேற்செங்கனிகடேன்சொரியுங்கருப்பறியலூர்க்
குருந்தாயமுள்ளெயிற்றுக்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்கோயி
லிருந்தானைமனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௫) பொடியேறுதிருமேனிப்பெருமானைப்பொங்கரவக்கச்சையானைக்
கடிநாறுபூம்பொய்கைக்கயல்வாளைகுதிகொள்ளுங்கருப்பறியலூர்க்
கொடியேறிவண்டினமுந்தண்டேனும்பண்செய்யுங்கொகுடிக்கோயி
லடியேறுகழலானைநினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௬) பொய்யாதவாய்மையாற்பொடிபூசிப்போற்றிசைத்துப்பூசைசெய்து
கையினாலெரியோம்பிமறைவளர்க்குமந்தணர்தங்கருப்பறியலூர்க்
கொய்யுலாமலர்ச்சோலைக்குயில்கூவமயிலாலுங்கொகுடிக்கோயி
லையனையென்மனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௭) செடிகொணோயுள்ளளவுந்தீவினையுந்தீர்ந்தொழியச்சிந்தைசெய்ம்மின்
கடிகொள்பூந்தடமண்டிக்கருமேதிகண்படுக்குங்கருப்பறியலூர்க்
கொடிகொள்பூநுண்ணிடையாள்கோல்வளையாளவளோடுங்கொகுடிக்
லடிகளையென்மனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே. [கோயி

(௮) பறையாதவல்வினைகள்பறைந்தொழியப்பன்னாளும்பாடியாடிக்
கறையார்ந்தகண்டத்தனெண்டோளன்முக்கண்ணன்கருப்பறியலூர்க்
குறையாதமறைநாவர்குற்றேவலொழியாதகொகுடிக்கோயி
லுறைவானைமனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௯) சங்கேந்துகையானுந்தாமரையின்மேலானுந்தன்மைகாணாக்
கங்கார்ந்தவார்சடைகளுடையானைவிடையானைக்கருப்பறியலூர்க் [யி
கொங்கார்ந்தபொழிற்சோலைசூழ்கனிகள்பலவுதிர்க்குங்கொகுடிக்கோ
லெங்கோனைமனத்தினானினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௧௦) பண்டாழினிசைமுரலப்பன்னாளும்பாவித்துப்பாடியாடிக்
கண்டார்தங்கண்குளிருங்களிக்கமுகம்பூஞ்சோலைக்கருப்பறியலூர்க்
குண்டாடுஞ்சமணருஞ்சாக்கியரும்புறங்கூறுங்கொகுடிக்கோயி
லெண்டோளெம்பெருமானைநினைந்தபோதவர்நமக்கினியவாறே.

(௧௧) கலைமலிந்ததென்புலவர்கற்றோர்தம்மிடர்தீர்க்குங்கருப்பறியலூர்க்
குலைமலிந்தகோட்டெங்குமட்டொழுகும்பூஞ்சோலைக்கொகுடிக்கோயி
லிலைமலிந்தமழுவாளனமனத்தினுலன்புசெய்தின்பமெய்தி
மலைமலிந்ததோளூரன்வனப்பகையப்பனுரைத்தவண்டமிழ்களே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகம் (௨)

## திருக்குரக்குக்காத் திருப்பதிகம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

## தேவாரம்.

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

(௧) மரக்கொக்காமெனவாய்விட்டலறிநீர்
சரக்குக்காவித்திரிந்தயராதுகால்
பரக்குங்காவிரிநீரலைக்குங்கரைக்
குரக்குக்காவடையக்கெடுங்குற்றமே.

(௨) கட்டாறேகழிகாவிரிபாய்வயல்
கொட்டாறேபுனலூறுகுரக்குக்கா
முட்டாருவடியேத்தமுயல்பவர்க்
கிட்டாருவிடரோடவெடுக்குமே.

(௩) கையனைத்துங்கலந்தெழுகாவிரி
செய்யனைத்திலுஞ்சென்றிடுஞ்செம்புனல்
கொய்யனைத்துங்கொணருங்குரக்குக்கா
வையனைத்தொழுவார்க்கல்லலில்லையே.

(௪) மிக்கனைத்துத்திசையுமருவிகள்
புக்குக்காவிரிபோந்தபுனற்கரைக்
கொக்கினம்பயில்சோலைக்குரக்குக்கா
நக்கனைநவில்வார்வினைநாசமே.

(௫) விட்டுவெள்ளம்விரிந்தெழுகாவிரி
யிட்டநீர்வயலெங்கும்பரந்திடக்
கொட்டமாமுழவோங்குகுரக்குக்கா
விட்டமாயிருப்பார்க்கிடரில்லையே.

(௬) மேலைவானவரோடுவிரிகடன்
மாலுநான்முகனுமளப்பொணாக்
கோலமாளிகைக்கோயிற்குரக்குக்காப்
பாலராய்த்திரிவார்க்கில்லைபாவமே.

(௭) ஆலநீழலமர்ந்தவழகனார்
காலனையுதைகொண்டகருத்தனார்
கோலமஞ்ஞைகளாலுங்குரக்குக்காப்
பாலருக்கருள்செய்வர்பரிவொடே.

(௮) செக்கரங்கெழுசெஞ்சுடர்ச்சோதியா
ரக்கரையரெம்மாதிபுராணனார்
கொக்கினம்வயல்சேருங்குரக்குக்கா
நக்கனைத்தொழநம்வினைநாசமே.

(௯) உருகியூன்குழைந்தேத்தியெழுமினீர்
கரியகண்டன்கழலடிதன்னையே
குரவனஞ்செழுங்கோயிற்குரக்குக்கா
விரவுமெல்வியுமேத்தித்தொழுமினே.

(௧௦) இரக்கமின்றிமலையெடுத்தான்முடி
யுரத்தையொல்கவடர்த்தானுறைவிடங்
குரக்கினங்குதிகொள்ளுங்குரக்குக்கா
வரத்தனைப்பெறவானுலகாள்வரே.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம் முற்றிற்று.

## திருக்கைலாயபரம்பரை தருமபுர ஆதீன சிஷ்யரும் வித்வசிகாமணியுமான ஸ்ரீமாந் S. பால்வண்ண முதலியார் அவர்கள் செய்த சாற்றுக்கவிகள்.

அலகிலாப் பாச விருள்கடிந் துலக ரனைவரும் பரகதி யடைய
நலமிகு தருமை முதற்சிவ ஞான தேசிகன் னல்லருண் ணயந்த
பலவள மருதூ ரம்பல வாணன் பாடினன் பைந்தமிழ்ப் பனுவல்
உலகுயர் தலமாத் திகழ்கருப் பறிய லூர்ப்புரா ணத்தினை யுணர்ந்தே.

அத்தினி லாரு மருஞ்சுவை யதனை யவனியு ளனைவரு மறிய
மெத்திய வச்சு வாகன மேற்றி மிளிர்ந்தவ ஞொணில் மேலாம்
உத்தம ஞான முணர்ந்தமெய்த் தவத்தோ னுயர்துற வறத்தினி னின்ற
பத்தனுந் தருமைச் சுப்பிர மணியப் பண்ணவன் பாவலர் கோவே.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்கருப்பறியலூர்த்தலபுராணம்.

### விநாயகர் வணக்கம்.

சித்தி புத்தி திருவரு ளாற்பெறு
முத்தி சொற்பொருண் முற்றும் பலம்பெறப்
பத்தி யாளர் பரவருள் கற்பக
வத்தி செய்ய வடிநிழல் சேருவாம்.

### பாயிரம்

#### குற்றம் பொறுத்தவர் துதி

பூமேவு விதிமுதலோர் தினந்தேடும் பரஞ்சோதி புனிதா கா ர
மாமேவு சிவானந்த வகண்டபரி பூரணமா மகத்து ஞான ம்
பாமேவு வேதாந்த மலர்திறந்து பார்க்கவரும் பசுந்தேன் செந்தே ன்
காமேவு மாதித்த புரேசனிரு தாட்கமலங் கருதி வாழ்வாம் [க]

#### கோலவளை நாயகி துதி

உலகியற்றுஞ் செயலாகி யுயிர்க்கரும பேதமுண ருணர்வா யார்க் கு
நிலவுமுத்தி கொடுத்தருளு நேசமாய்ப் பாசவிரு ணிருத்தி நீக் க
விலகுதிரு வருளுருவா யாதித்த புரேசனிடத் திருக்கு மன் னை
அலகில்புக ழானந்தக் கோலவளை நாயகிதா ளகத்துள் வைப்பாம் [உ]

#### கெற்பஞான பரமேசுவரர் துதி

தற்பதத்தின் பொருளாகித் தொம்பதத்துக் கசிப்பொருளைச் சார நல் கு
மற்புதத்த ஞதித்த புரத்தன்மதி முனமணிவா ஞழி யோ சை
புற்புதத்தி னுற்பவம்போற் சன்னிதியி லுலகியற்றும் புனிதன் வா ம
சிற்பராக்கா கமப்பொருளை யருள்பரம தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்

#### கெற்பஞான பரமேசுவரி துதி

ஆசகலு மணிவிளக்கை யருட்கனியைச் சிவானந்த வமுதை யன்ப ர்
நேசமெனும் பால்பருகும் பூங்கிளியை யுலகருளி நிறுத்துந் தா யை
வாசமலர்க் கருங்குழலை யாதித்த புரச்சயில மன்னி வாழு ம்
ஈசனிடத் தமர்ந்தவளை ஞானநாயகியை நித்த மிறைஞ்சி வாழ்வாம் [ச]

#### சட்டைநாயகர் துதி

பரநாத வரைமணிகிண் கிணியொலிப்பப் படமெடுத்துப் பார்க்குந் துத் தி
வரநாக கங்கணத்தான் மாலகந்தை யிருளகற்ற வந்த சோ தி
யுரனுகும் வித்துருமச் செஞ்சடையா னருளுததி யுயரா தித் த
புரமேவு மணிவளைவாழ் சட்டைநா யகன்மலர்த்தாள் போற்றி வாழ்வாம்

### விநாயகர் துதி

நந்தவனந் தவிர்க்கவரு ணதிதருவ தெனச்சுவர்க்க நாதன் வைத் த
நந்தவனஞ் செழிக்கமுனி கமண்டலநன் னீருதவு நாதன் சோ தி
நந்தவனம் புயன்மகிழக் கருப்பறிய லூருவந்த நல்லோன் வல்லோ ன்
நந்தவன வடிவான வரந்தருமைங் கரன்மலர்த்தாள் நண்ணி வாழ்வாம் [௬]

### சுப்பிரமணியர் துதி

மயில்களிக்க வருமேகம் வள்ளியெனுங் கொடிபடர வளர்சந்தா ன
மயிலெனுஞ்செங் கதிருதிப்ப வாறுமுக மாகியபே ரமுத வா ரி
பயில்புயத்திண் சிகரமிசைத் தேவதந்தி விளையாடும் பதும ராக ச்
சயிலமுமை மணவாளன் மகிழ்ந்தளித்த முருகனடி சார்ந்து வாழ்வாம் [௭]

### திருஞானசம்பந்தசுவாமிகள் துதி

ஆரமணு மிருணீங்க மானியமைச் சகமுளரி மலரத் துன்ப த்
தாரகைபோய்ச் சிவசமைய மெழுந்திருப்ப பதிகவொளி தழைப்ப வீசி [ம்
வீரமணிச் சின்னமெனுங் குக்குடமுன் முழங்கிடப்பின் விளங்கித்தோன்று
பாரதனிற் பானுவெனுந் திருஞான சம்பந்தர் பதங்கள் போற்றி [௮]

### திருநாவுக்கரசுசுவாமிகள் துதி

மல்லாருஞ் சூலையெனு மிருவினையொப் பாற்பவுத்த மாயா பே த
மில்லாமற் றில்தவதி யாரெனுஞா னத்தரணு ரிணைத்தாள் சேர்ந் தே
கல்லாலோ ருத்திதனைக் கடந்துபா திரிப்புலியூர் கண்டு தீதி ற்
செல்லாத சொல்லரசி னிலைபரவி மகிழ்பூத்துச் செழித்து வாழ்வாம் [௯]

### சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி

இருதனமா மலையின்மணிப் பணிபூட்டிப் பரவையமு தின்பந் துய்த்தோன்
பருமுறியைக் கிழித்துமறி யலைமுன்ன மேவியதோர் பயத்திற்போ ன
வொருமுதலை வரவழைத்துக் கடனுகத் தோன்றல்வர வுரைக்கும் பாட ற்
றருமுதல்வ னுலால சுந்தரன்சே வடிப்பதுமஞ் சார்ந்து வாழ்வாம் [௰]

### மாணிக்கவாசகசுவாமிகள் துதி

மாடுகொடு போய்நமக்கு வாசிதர வேண்டுமென வழுதி கூற ப்
பீடுதரு பெருந்துறையின் மந்திரத்தில் வாசிதனைப் பெருக வாங் கி
யோடுமுய லெண்ணரிய வாசிமன்னற் கீய்ந்துகதி யுயர்ச்சி காட் டி
வீடுபெறு மாணிக்க வாசகன்றாள் பரவிவினை விதத்தை வெல்வாம் [௧௧]

### அடியார்வணக்கம்

பூதியுட னக்கமணி நாம்பாறு மெய்புனைந்து புனித மா ன
வாதியரன் புகழ்பரவு மன்புடைய ராவனொனு மளவி லா த
நீதியினு ரவர்பதும மலர்த்தாளைப் பணிந்துநித நிலத்தி னீண் ட
காதிடுவெம் பிறவியலை கடந்துயர்ந்த வருட்கரையைக் காணுவோமே [௧௨]

அளவில்புகழ்ச் சிரடியா ரெண்ணிலரா யினுஞ்சாலோ காதிநான்கு,வளமை
பெற்றோர் நால்வரவை பெறச்சரியை முதனான்கும் வழாதுசெய்தே, யுள
மகிழ்வோர் நால்வருவ ரெண்வகைய ரெனத்தொகைபெற் றுயர்ந்தோ ரீ ச
னிலகுமலர்த் தாளிணை சார்ந் திருசார்பும் விட்டவர்தாளி றைஞ்சிவாழ்வாம்

ஞானாசாரியர் துதி

பாசவிரு ளகலவினை வெம்மைகுளிர்ந் திடமானயப் பதுமங் கூம் ப
நேசர்செவ்வாய்க் குமுதம்விரிந் துபதேசத் தேன்ததும்ப நிலைநாற் பா த
வாசகல்தா ரகைவிளங்க வருட்கிரண மானந்த வமுத மல்கி த்
தேசமருஞ் ‡சிவஞான தேசிகபூரணமதியைச் சிந்தைசெய்வாம் [கச]

அவையடக்கம்

வளைப்பி னுதன் மகிமையை யேழை யே
னுளைக்க வெண்ணா யுறுதல்கை கண்ணிலா ன்
தளைக்குண் மிக்க தமனிய வெற்பைமா ற்
றுளைக்க வெண்ணி யுறுசெய லொக்குமால் [கரு]

திரித்த ராக்குணஞ் செய்தவ ராதித் த
புரிக்குட் குற்றம் பொருத்தவ ரென்னும்பே ர்
தரித்த லாலவர் தங்கதைக் கென்சொலி ன்
விரித்த குற்றம் பொறுப்பது மெய்ம்மையே [கசு]

பத்தர் போல நடிக்கவும் பைந்தமிழ்ப்
பித்த னென்று பிதற்றவும் பெற்றயா ன்
சித்த மாசையிற் செப்புமிப் புன்சொலு ம்
உத்த மப்புல வோர்கொண் டுவப்பரோ [கஎ]

சிறப்புப் பாயிரம்

முற்பாவு மொழிந்தவரு மினிப்பாடல் முறைமுறையாய் மொழிகு வாரும்
கற்பாருங் கேட்பாரு மாவதல்லாற் றும்பாடல் கழறு வண்ண ம்
பொற்பாவு மாதித்த புரமகிமை தமிழாசப் புனைந்தா னென்று ஞ்
சொற்பாவின் செயம்படைத்த மருதூரப் பலவாண சுமுகத்தோனே [கஅ]

பாயிரமுற்றிற்று ஆகச் செய்யுள் [கஅ]

‡திருக்கைலாயபரம்பரை தருமபுரவாதீனத்தில் 10-வது குருமூர்த்தமாக
ஏழுந்தருளியிருந்த மகாசன்னிதானம்.

## புராணவரலாறு.

பிரசமலர் பொதுளிமது வொழுகிநறை பரந்துதென்றல் பெயர்பூங் காவும்
வரவனச மலர்த்தடமுஞ் சோமலதை தருப்பைபயில் வனமு நாளு ம்
விரவுகந்த மூலபல மிகுதிகளின் பகுதியுமுன் மேவிக் கண்டோ ர்
பரவுமனம் பொய்வாழ்விற் படராத பெருவளனும் பல்கு மாதோ [௧]

புண்ணியத்திற் காலயமாய் முக்குறும்பு முளையாத பூமி யாகி, நண்ணுமிக
பரங்கொடுக்கு மியல்பினதா யுகபேத நணுகா தாகி, யெண்ணுமுயி ரெவை
யுமொன்றுக் கொன்றுபகை யின்றிநண்போ டியைவ தாகி, விண்ணுலகம்
வியந்துளதாய்க் கண்ணுதலும் விரும்புவதாய் விளங்கு மாதோ [௨]

அரணிகடை பவர்கவியங் கொணர்பவர்வேள் விக்கலனை யமைப்போர் செய்
வோர், பரனையுணர் பவர்மறைநூல் படிப்பவரர்ச் சனைபுரிவோர் பயில்விப்
போர்கள், விரதமுயல் பவரரிய தவம்புரிவோர் பரவீட்டில் விழிப்போர் மூன்
று, புரதகனன் பணிசெய்வோ ரித்தகைய மெய்த்தவர்கள் பொலிவ தாமால்

அனையவள நைமிசா ரணியமதின் மாதவர்க ளாண்டீ ராறி ற்
கனையழலா குதியாகம் புரிந்துமன முவந்திருக்குங் காலை யார்க் கு
முனைவனியற் புகழுருவாஞ் சூதமுனி வரன்வரவு மொழிய நாடி [டார்.
வினையகலு முனிவர்குழா மெழுந்தெதிர்சென் றாதரவின் விரைந்து கண்

மாதவனே வருகவெங்க டவப்பயனே வருகவெந்தாய் வருக ஞா ன
வாதவனே வருகவென முகமனுரைத் தினிதணைவித் தர்க்கியமீந் து
மேதகுமா சனமுதவிச் சூதமுனி வரற்குநன்மை வினவிச் சூழ்ந் தே
யாத்ரவி னவரிருப்ப விருந்தனன்மெய்ப் புராணமெலா மறிந்த மேலோன்

இருந்தவனை யிருந்தவர்கண் முகநோக்கி நீயுனைப்ப யாமுக் கண்ண ன்
பெருந்தலத்தின் மகிமையருட் டீர்த்தத்தின் மகிமைசிவ பெருமான் மேவத்
திருந்தியமூர்த் தியின்மகிமை யறிந்துமவா வடங்காத செயலா லின்னு ம்
அருந்தவவக் கதைசெழுந்தேன் நின்முகபங் கயத்தருந்த வருள்வா யென்ன

நீவிர்சொற்ற துலகுயிருக் குறுதியந்தோ மகத்தழலி னெய்சேர்ந்தாற் போ
மேவியமெய்ப் பரமசிவம் விளங்குறுமா தித்தபுர மேன்மை தன்னை [ன்
மாவியப்பிற் பிரமாண்ட புராணமதி ரகசியமாய் வழுத்து மாலென் [னே
நாவியற்சொற் கொடுவிளம்ப லரிதெனவவ் வரலாற்றை நவில்வான் மன்

பெருவசிட்டன் முன்னொருநா ளயனுலகுற் றிளங்கதிர்போற் பிறபை யானு
விருதிசையும் விளக்கிமறைப் பொருடனைச்சூழ் சனகன்முத லெவர்க்கு

மோதி,யொருகலையா நான்முகனைத் தொழுதெலா மறிந்தவனே யுலகம்
யாவுந், தருபகவ சச்சிதா னந்தபர வகவாக்கின் றலைவா வென்ன [அ]

பகர்துதிகள் பலமொழியு முனியையிவண் வருகருமம் பகரொன்றே நான்
முகவனுரை செயமோக நீர்நிறைந்து சோகவலை மூன்றுந் துன் ப
மகரமலைத் திடச்செனன மரணமுயிர்க் குதவுபிர வஞ்ச மாகு ம்
புகலுததி கடந்தருளி நடந்துமுத்திக் கரையேறப் புகலு பாயம் [கூ]

ஈங்கிதென வருள்புரிவா யெனமறையோன் சிவதலங்க ளெவற்று மேன்
தாங்குமதி ரகசியமா மாதித்த புரமகிமை சார்ந்து கேட்போர் [மை
நீங்கரிய பிரவஞ்ச வுததிகடப் பதுசரத நிலாவும் வெள் ளி
ஓங்கலின்முன் னொருகாலத் திமையமலை யுமைசிவன்ற ளுவந்து தாழ்ந்து

வேதநிதி யறைவிளக்கே மெய்ப்பொருளா கமத்தெளிவின் விளைசெந் தே
போதபர சுகவடிவே புராதனனே பசுபோதப் போன மாந்தும் [னே
பாதசரோ ருகத்தடமே மலதிமிர நிராகரணப் பரிதியேமெ ய்
நீதநீரா மயகருணை கரபரிபூ ரணவரத நிருத்த ன த

என்றுபல துதித்திலவ வாய்புதைத்தா டையையொதுக்கி யிறைஞ்சி யோர்
சார், நின்றுனது திருவுள்ளத் தெக்காலு மோரியல்பாய்நேய மேவு, கின்று
தல மெத்தலமத் தலமதனை யுரைத்தியெனக் செண்டை நாட்டத், துன்
றுகருங் குழற்செவ்வாய்ப் பசுங்கொடிகே ளெனப்பரமன் சொல்வதானன்

பத்தர்செயும் பூசையினு நின்பூசை நமக்கினிதாம் பான்மை போ ல
வெத்தலத்து மாதித்த புரமேநாம் விரும்புதல மென்று ஞா ன
வுத்தமிக்கத் தலமகிமை யுரைத்தனனென் றம்முறையே யுந்தி பூத்தோ ன்
வித்தகமெய் வசிட்டனுக்கோ தினன்முனிவீ ரெனச்சூதன் விளம்பினனல்

பெருகுதவச் சூதமுனி முனிவரருக் குரைத்தபடி பிறழாதே மெய் த்
திருவளரா தித்தபுர மகிமைதனைத் தலந்தீர்த்தஞ் சிகர மேன் மை
கருதருமா முனிவரிரா வணனநுமன் விசித்திராங் கதனே யென் ன
வருமுறையே சருக்கங்க ளேழாக்கி யிருந்தமிழால் வகுத்துச் சொல்வாம்

புராணவரலாறு முற்றும் ஆகச்செய்யுள் [கூஉ]

## தலச்சருக்கம்.

தார மாமலைச் சந்திரன் றேனுகந்
தார மாமலை செய்கொன்றை சாத்திய
தார மாமலை தாதை யறிவொணாத்
தார மாமலைத் தாணுவைப் போற்றுவாம்

உனகவரைத் தோளுமையை யொருபாகத் தினிதமைத் து
பனகவரை யொளிதிகழப் பனிமதியம் நிலவெறிப் ப
மனகவரை மாற்றுமெழின் மாதவர்கண் மகிழ்ந் திசைக்கு ங்
கனகவரைப் பெருமான்றன் கமலமலர்ப் பதம்போற்றி [௨]

கணிச்சிகர மிருளகற்றுங் கடுக்கைவன்னி மதியுட னே
பணிச்சிகரப் புனல்நீக்கிப் பண்டுமேது ரையிற்பிட் டு
‡வணிச்சிகரத் தினில்வாங்கி வைகையிலோர் கரையடைத் து
மணிச்சிகரத் திருந்தருளும் வரதன்மல ரடிபோற்றி [௩]

கருப்பறிய லூர்ப்சலைக் கதலிமின்ன ரணிந்திடவ ங்
கருப்பறிய லூர்மடுவிற் சுவர்வர்கதிர் முத்தினங்க ள்
கருப்பறிய லூர்கருவாங் காதலித்த படியளித் த
கருப்பறிய லூருகந்த கண்ணுதலைக் கருதுவாம் [௪]

தொல்லைவன நதியதனுற் றொலையாத பெருவளங்க டலங்கித் தோன்றுங்
கல்லைவனங் கழனியினிற் கதிர்ச்சாலி பணைத்தோங்குங் கமலமன் னு
மெல்லைவன யாகச்செய் தினியவரம் பலவளித்தாற் கெழில்சேர்ந் தோங்கு
முல்லைவனந் தனிலிருந்த முன்னவனை யென்னளு முன்னிவாழ்வாம் [௫]

வயலெலாந் தழைவேழம் வனமெலா முழைவேழ ம்
அயலெலாம் நெற்களமா மரிவையெலாம் பொற்களமா ங்
கயலெலா மங்கையர்கண் கவினெல்லா மங்கையர்க ண்
குயமெல்லாஞ் சந்தனங்கள் குளமெல்லாஞ் சந்தனங்கள் [௬]

சிதவாவிசூழ் செழும்பொழி லாதித்த புரச்சி ர்
மாதபோதனீர் மதிமுடி வரதனே முற் று
மோத வல்லவ ஞேதனும் போதனு முரைக்க ப்
போத ராதென வியந்தருட் சூதனும் புகலும் [௭]

சங்க வார்குழைக் காதிஞர் தமக்குான் னிதி யா
யெங்குமார்சிவத் தலங்களி னுத்தம மென லா
யங்க ஞதியாய்ச் சாரத்துட் சாரமா யமல ந்
தங்குகின்றதாய் மஞேக்கிய மாகியே தயங்கும் [௮]

கிட்டி யத்தலப் பெருமையி லொருசொலைக் கேட்போ ர்
தட்டு மப்பவத் துயருறூர் தலந்தெரி சித் தா

---

‡ வாணிச்சி வணிச்சி யென விகாரமடைந்தது.

ரிட்ட சித்தியு முத்தியு மெய்துவ ரெனிலெ ன்
நட்ட மாடியைக் கண்டவ ரிலாபமார் நவில்வார் [கூ]

அளைக்க ணத்துட ஞெருகண மொருதின மா ஞு
துளைக்கு முத்தின மைந்தின மாயினு முயர ப்
புரத்தி ருந்தவ ரன்னகர் வழிக்கொடு போவோ ர்
கரத்தி னெல்லியங் கனியென முத்தியைக் காண்பார் [க0]

ஆயி னத்தலத் தனுதின வாசமா யமர்வோ ர்
தூய முத்தியைப் பெறுவது சொல்லவேண் டுவ தோ
மேய சித்தர்கள் யோகிகள் விண்ணவ ரதன்மே ற்
பாய புற்கொடி மரம்புள்ளு விலங்கெனப் பயில்வார் [கக]

ஆனைமாமுக னறுமுக னம்பிகை யயன்மா ல்
ஏனை ருத்திரர் வசுக்களா தவர்திசை யெண்ம ர்
மீனை யார்கொடி வேளெழு முனிவர்மெய்க் கிரக ர்
தேனை மேவல ரருச்சனை செய்ததிற் சிறந்தார் [கஉ]

எங்கி ருக்கினு மிருடிகள் யோகரித் தலத் தை
யங்கு சித்தமு நினைந்துவீ டெய்வதுவ ராஞ ற்
பொங்கு மைக்கடற் புவியிளோர் புனிதவீ டெய்த த்
திங்க ளொத்துமெய் யிளைப்பவென் னோதவஞ் செயலே [கங]

பொருவி லுத்தம புரியெனு மாதித்த புரத்தி ன்
வ்ருப வர்க்கருள் செயும்பொருட் டருளுரு வரத ன்
உருகு முள்ள த்திற் கோல்வளை ஞயகி யுட னே
மருவு மென்பது சரதமே யெனத்தின மதிப்பீர் [கச]

காஞ்சி காளத்தி சீசயி லங்களர் கா சி
யாஞ்சி ராப்பள்ளி யவந்திகை முதுகிரி யாரு ர்
வாஞ்சி யங்குட மூக்கரு ணசல மது ரை
பூஞ்சி வாயரா மேச்சுரம் புகலிபூந் துருத்தி [கரு]

திருவை யாறவி ஞசிபட் டீச்சுரந் தேவூ ர்
மருது பாம்புர மறத்துறை கழுக்குன்றம் வழுவூ ர்
தருமை பூவணந் தாடகை யீச்சுரந் தஞ் சை
பருதி யூர்கட வூர்புக லூர்மழ பாடி [கசா]

சாற்று மிங்கிவை யுத்தம தலங்களித் தலத் து
ஏற்ற மாதித்த புரமெனச் சொலும்பொழு திறைவ ன்
நாற்ற டம்புயம் புளகெழ நகைமுக மல ர
வீற்றி ருக்குமென் றுலெவ ரதன்புகழ் விரிப்பார் [கஎ]

வெல்லு காவிரிக் குத்தரம் விநாயக நதிக்கு ப்
புல்லு தெக்கணம் பொருந்திய வாழ்கொளி புத்தூர் க்
கெல்லை கீழ்த்திசை காழிக்கு மேற்றிசை யிலங்கி ச்
சொல்லு நாயக மணியெனத் துலங்குமத் தலந்தான் [கஅ]

யூதி காவன முயர்கன்ம நாசமெய்ப் புர மே
யாதி யாதித்த புரங்கருப் பறியலூ ராகு ந்
தீதில் பச்சிமக் காழியே யெனப்பெயர் சிறந் து
கோதில் பற்பல பெயரொடு நித்தமாய்க் குலவும் [கசு]

மருக்கொண் முல்லைகள் சேர்தலால் யூதிகா வனமா ங்
கருக்கொள் பாதகந் தீர்த்தலால் கன்மநா சப் பே
ரருக்க னர்ச்சனை செய்தலா லாதித்த புரி யு
ளிருக்கு ஞானமீ தலிற்கருப் பறியலூ ரெனலாம் [உ௦]

பிரளை யத்தினு நிலவலாற் பெய்வளை யுமைக் கு
வரத னல்லரு ளுணர்த்தலா லிரத்தின மலைமே ல்
விரவு கஞ்சுகி நாதன்வீற் றிருத்தலால் விண்ணோ ர்
பரவு காழியின் மேற்கதாற் பச்சிமக் காழி [உக]

ஒழுக்க மில்லவர்க் கொருபிடி யோதன மே னு
மழுக்கு டைத்துகி லொருமுழ மாயினு மளிக் கி
விழுக்க மற்றிக போகம்வேண் டியபடி யெய்தி ப்
பழுத்த செஞ்சடைப் பரமர்சா மீப்பமே பயில்வார் [உஉ]

பத்த ராகியத் தலத்தனு தினமுறை பவர்க்கு ச்
சுத்த வத்திரம் விசித்திர வத்திரத் தொகு தி
யுத்த மக்கவு சிகத்தொகை யுலப்பிலா பர ண
மத்த மாமணி நிலமனை யளிப்பவர் தாமும் [உங]

நெய் மணத்திடு கருனையு நேயம்வெண் டயிரு ங்
குய் மணத்திடு கறிகளுங் கொழுங்கனி விதமு ம்
மெய் வெளிப்படு மின்சொலு மிடையிடை விரவி ப்
பெய் தனத்தினைக் கொடுத்திடும் பெரியவர் தாமும் [உச]

முற்ற ரம்பையின் முதிர்கனி யெனமுலை விம்மி
பெற்ற கன்றுதன் வயினிறைத் தனந்தரம் பெரு
யுற்ற பாலொரு குடநிறை வுறும்படி கரக்கு
குற்ற மற்றவான் கன்றொடு கொடுத்திடு மவரும் [உரு]

கடை சிவந்தரி பரந்துமை யணிந்திரு காதி
புடை நடந்துமா னினந்தனை வனந்தனிற் போக்கி
படை மறந்தனி பயில்விழிக் கன்னியை வே
கடை யறிந்தவர்க் கலங்கரித் துதவிய நரரும் [உசு]

பொருந்து மப்பலத் தொகையினை யினைத்தெனப் புவி
விருந்து நாறுக முரைப்பினும் யாவர்க்கு முடி
திருந்து மாலயஞ் சென்றல கிட்டுநீர் தெளித்
யருந்த வர்க்கமு தாம்பரன் பணிசெயு மவரும் [உஎ]

சோம வாரத்து மிருபிர தோடகா லையினு
காம ராயிரங் கதிர்குட கடல்புகுங் காலு
வாம மாதினன் வளர்திருக் கோயிலின் மருவு
தாம நெய்விளக் கன்புட னமைப்பவர் தாமும் [உஅ]

இந்து சேகரர்க் கியம்பபி டேகத்திற் கேற்கு
சுந்த மார்தயி லந்தயிர் பால்சருக் கரையு
மந்த மாருத மலையத்தி லுதித்தசந் தனமு
சிந்தை யன்புட னியன்றவை செலுத்துசெம் மையரும் [உகூ]

வில்வ மர்ச்சனைக் குதவிய விரகினர் தாமு
சொல்வ ளத்தொடு பூந்தொடை தொடுத்தளிப் பவரு
செல்வ மிக்கருள் பிழைபொறுத் தவரிணைத் திருத்தா
பல்வ கைத்துதி சொலித்தினஞ் சேவைசெய் பவரும் [ஙய]

சார்ந்த வந்தண ரருந்தவர்க் கிடஞ்சமைத் தவ
மார்ந்த நீர்த்தடங் கூவல்க ளமைத்திடு மவரு
வார்ந்த தண்டலை பூவனஞ் சமைக்கும்வண் மையரு
தீர்ந்து பாசங்கள் பரகதி பெறுவது திரமே [ஙக]

ஓதி வல்வினைப் பகைகடந் தித்தலத் துதித்
பாத வங்கொடி கொடியவல் விலங்கினம் பற
சோதி சங்கர னுலகினிற் சோதிசன் னிதி
லாத ரத்துட னிருக்குமீங் கிதற்கிலை யையம் [ஙஉ]

அன்ன மெய்த்தலத் தெவருடல் மரிக்கினு மசல க்
கன்னி பாகன்மெய்த் தாரக மவர்வலக் காதி ன்
முன்ன மேயுப தேசமுஞ் செயுந்தரு முத் தி
யின்ன வற்புத மிக்கலி யுகத்தினு முளதால் [௩௩]

இந்த மெய்த்தல மகிமையை நான்முக னியம்ப ச்
சிந்தை யாதரம் பெருகிட வசிட்டனுந் தேர்ந் து
வந்து மாபதி பிழைபொறுத் தவன்பதம் வணங்கி ப்
புந்த நீக்கிடு சிவலிங்க தாபனம் பண்ணி [௩௪]

ஆக மப்படி பூசனை குறைவற வமைத்து ப்
பாக முற்றிட மகிமையை விருப்பொடு பகர்ந் து
சோக மற்றிட வுயிர்க்கெலா மின்னருள் சொரிந் தே
யேக மெய்ப்பர முணர்ந்தவ ணிருந்தனன் நெடுநாள் [௩௫]

தலச்சருக்கம் முற்றிற்று-ஆகச்செய்யுள் [௩௭]

## தீர்த்தச்சருக்கம்.

செய்தவம் பெருக்கி மனத்தினை யொருக்கித் திரிமல முருக்கிமா லய ஞ
மெய்தரும் பரம சிவனரு ளமுத மிருந்தருந் தியதவ முனிவீ ர்
மெய்தழைத் திலகு மாதித்த புரியின் வெகுவித தீர்த்தமுண் டவற்று ட்
பொய்தவிர்த் திலகு முத்தம தீர்த்தம் புகலுவா மகலுவாம் பிறவி [௧]

பாரினில் விளங்கு விநாயக தீர்த்தம் பரவிய சூரிய தீர்த்த ஞ்
சீரிய வசிட்ட தீர்த்தமே யறம தீர்த்தமே சிம்பபுட் கர ணி
யேரிலங் கருள்சேர் சங்கபுட் கரணி யினியபொற் றமரைத் தட மே
நேரில் செங்கழுநீர்த் தடமெனத் தீர்த்த நிலவுமோ ரெட்டென நிகழும் [௨]

விளம்பிய தீர்த்த மவற்றுண்முன் னுரைத்த விநாயக நதிவர வியம்பிற் [ன்
றுளங்கலில் வரத்தா லசுரருக் கிறையாஞ் சூரனல் வலிதொலைந் துயர்வா
வளந்தனை யிகந்து புரந்தரன் மூங்கில் வடிவமாய்க் காழியின் மரு வி
யுளங்கனிந் தரனைப் பூசனை புரிய வுன்னியே யன்னது முடிப்பான் [௩]

புன்னைபூஞ் செருந்தி பாடல மிலஞ்சி புரசுகூ விளங்கர வீர ம்
வன்னிகோங் கிதழி குரவமந் தார மல்லிகை தளவிரு வாட் சி
யின்னபூந் தருவுங் கொடிகளுந் தழைக்க வியற்றினன் நந்தன வனத்தைப்
பின்னதற் கெழிலி பொழிதரு மழைகள் பெய்திடா தொழிந்தன பலநாள்

அனையபூ வனந்தா னினியநீ ரிலவா யனைமுலைப் பால்பெறு மழலை த்
தனையர்போல் வாடிப் புலர்தலும் பாக சாதன னருந்துயர் பொருந் தி
யினையது தவிர்ப்பார் யாரெனக் கருதி யெழில்பெறு மானைமா முகத் து
முனைவனை நோக்கித் தவம்புரிந் தினிய மோதக மாதிமுக் கனிகள் .. [ரு]

பொருப்பென விருப்பிற் குவித்தினி தூட்டிப் பூசனை புரிந்தொரு மருப்பிற்
கருத்தனே களிற்று முகத்தனே யைந்து கரத்தனே யெனத்துதித் தடியே
றிருத்துபூ வனநீர் பெற்றிடா துலருஞ் செயலினை மாற்றிநீ ரளித்தென்[ன்
வருத்தநீ தவிரென் றிறைஞ்ச வைங்கரனு மகிழ்ந்தெழுந் தருளியின் னரு
ளால் [சு]
பார்த்துநீ வருத்த மொழிகநின் பூசை பரிந்தன மிருந்தவிக் கால ங
கார்த்துளி பொழியுங் காலமன் றுனது கடியபூங் காவனஞ் செழிக்க[பாற்
நீர்த்துறை வருவித் துனதிடர் தணிப்போம் நிலம்புகழ் சையமால் வரைப்
ரூர்த்தடம் புயத்தாய் வருகென நடந்தான் சசிமண வாளனுந் தொடர்ந்தான்

இங்கிதன் முனமே சிவன்விடை கொடுப்ப வியல்குறு முனிதிரை சுருட்டுந்
துங்கபத் திரிகோ தாவிரி யமுனை சோணபத் திரிநரு மதைசீர் க்
கங்கையே வாணி முதனதி நிறைத்த கமண்டலங் கரதலத் தேந்திக் [ன்
கொங்கினி லுயர்ந்த சையமால் வரைமேற் குறுகிவீற் றிருந்தன னவன்மு

னிருத்தனுர் மகனேர் பிரமசா ரியைப்போ னிற்றலு மெழுந்தகத் திய னு
மருக்கிய மீந்தே கந்தமூ லாதி யளித்தக மகிழ்வுறப் புரிந் து
பொருத்தமா முகன்கைக் கமண்டல முதவிப் புவியிடத் திதனைவை யாதிங்
கிருத்தியென் றர்யா சமனமே புரிய வெய்தினுன் *குரோசமோ ரளவின்

அகறலு முனியை யழைத்தனன் முக்கா லணைந்திலன் கமண்டலம் பரமன்
மகனிலத் திருத்த விந்திரன் காக வடிவெடுத் தைங்கர னரு ளா
னிகழ்வுறக் கவிழ்த்தா னனையநீர் பொன்னி நீத்தமாய் வாரிபுக் கதுபி ன்
றிகழ்முனி பிரம சாரியை முனிந்து சிறுகையை முட்டியாய்ப் பிடித்து [ய]

தாக்குதற் கருகில் வரவிப முகத்தோன் தனதுமெய் வடிவினைக் காட்ட ப்
போக்குறு கரத்தாற் றனதுமத் தகத்திற் புடைத்தடி பணிந்துள நடுங்கி த்
தீக்குணன் பிழையைப் பொறுக்கெனப் பொறுத்தே தீர்த்தமு முன்புபோற்
றூக்கமா யெழுந்த பொன்னிமா நதியி னுத்தர வாகினி யாகி. [கொடுத்தா

பேழையிற் பணிபோல் விரைந்தரன் புகழ்போற் பெருகியே பரந்தவ னு
ரைபோ, லாழமுற் றடியார் மனமெனத் தெளிந்தே யகத்தியன் றமிழென
வினிதாய்க், காழகிற் றுணியும் படிரகுங் குமமுங் கதிர்நிலாப் பணில நித்
திலமு, மாழையுஞ் சிதறி மறையொலி காட்டி வந்தது விநாயக நதியே[கஉ

---

*குரோசமென்பது கூப்பிடுதூரம்

அந்தமா நதிபூம் புகலியிற் பரந்தே யமிர்தசஞ் சீவினி பெற்றுத்
சிந்துமா ருயிர்வந் தறிவொடு செயலுஞ் செழித்தென நந்தன வனத்துச்
சந்தவார் தருவுங் கொடிமுதல் யாவுந் தழைத்தரும் பினமலர் பொதுளி [ர்
யந்தரா திபன்போற் செழித்தன துயர்தீர்த் தைங்கரன் பேரலெவ ரளிப்பா

அற்றைநாண் முதலா வந்தமா நதிதா ஞதித்த புரத்தி லெச்காலும்
வற்றிடா தோங்கிப் பிழைபொறுத் தவர்தம் மதிமுடிக் காட்டவு முரித் தா
யுற்றமா லகற்ற விசைந்த சோணுட்டி லுயர்ந்தபா கீரதி யெனலாய்
வெற்றிமா முகத்து விநாயகன் றரலால் விநாயக நதியென விளங்கும் [கச]

அப்புனல் படிவார் நூற்கடல் படிவா ருருந்துயர்க் கடலிடைப் படியார்
அப்புனல் நுகர்வார் சிவமது நுகர்வா ரனைமுலைப் பாலினி நுகரார்
அப்புனல் காண்பார் சிவபதங் காண்பா ரந்தக னுலகினைக் காணர்
அப்புனல் வசிப்பார் முத்தியில் வசிப்பா ருருநர கத்திடை வசியார் [கரு]

ஒழுக்கமுந் திருவுங் கல்வியு மறிவு முபாயமும் வீரமும் புகழும்
விழுப்பமுங் குணமு மடக்கமுந் திடமும் விரதமுஞ் சரதவா சகமு
மிழுக்கறு மனமு மின்சொலுந் தவமு மிரக்கமு மதிதபா வனையு
மழுக்கறு பரம கதியுநேர் பெறுவா ரைங்கர நதியிலா டுநரே [கசு]

கொங்குலா மலர்சேர் கணபதி நதியிற் குலவுகாற் றுலவிய தேசங்
க்கைசேர் காசி யாமென்னி லதன்சீர் கட்டுரை தருவதற் கெளிதோ [டிம்
சங்குசூ லுளைந்து தரளமீன் றலைமேற் றவழ்ந்துசெந் தாமரைப் பொகுட்
றிங்கள்போன் மருவுஞ் சூரிய தீர்த்தச் சிறப்பினை மேலெடுத் துரைப்பாம்.

முக்கணிறை மிக்கபுகழ் முற்றுமுண ராத்
தக்கனது வேள்வியிடைப் புக்கபிழை தன்ஞற்
றுக்ககிர ணங்கள்பல சூரியனை வீர
வுக்கிர னடித்திட வுதிர்ந்தபல தந்தம் [கஅ]

தந்தமொடு மெய்யொளி தணந்துமனம் வெட்கி
நிந்தையொடு சென்றுவளை நேமிகிரி தன்னின்
மந்திரமு றைந்துசில வைகலவண் வைக
விந்தவுல கெங்கணு மிருண்டொளி யின்றி [ககூ]

விப்பிரர் மறைப்படிசெய் வேள்வியினை விட்டார்
தப்பில்பிதிர் கன்மநெறி தன்னையும் விடுத்தார்
இப்புவியி லுள்ளவர்கள் யாருமிட ரெய்தி
செப்பமொடு தத்தமுறை செய்வதில ராஞர் [உ0]

இவ்வகை தெரிந்தசுர ரிந்திரனோ டேகி
செவ்வியழி கின்றபரி திக்குமுன மெய்தி
கவ்வியமு மின்றியொரு காலுமொழி யா
வவ்வியமு மின்றியிரு ளானதுல கெங்கும் [உக]

நாளளவு காணுகிலர் நானில வளாக
ஆளரச ரோனையர்க ளாரவிடர் நே
வாளகிரி மேவினையிவ் வண்மையறி யார்போ
நீளறிவி னோர்புரியு நீதியிது வன்றால் [உஉ]

ஆயிர நெடுங்கிரணை வன்றநும னுய்ய
பாயிர முகப்பனுவல் பாடுமுரை யா
மாயிரு ளிரிந்திட மணிக்கதிர் பரப்பி
சேயகக னத்தினிடை செல்கபுகழ் மல்க. [உங]

ஈதுமுறை யென்றவ ரியம்புமுரை கொண்
யாதவனு நானௌியி லாதவனு மா
னேதுசுரர் யாவரு முருதுதய ரென்வா
மீதுமிக வுற்றதெனை வேண்டவிர்க ளென்ன [உச]

ஆதவ வுனக்குறு மருந்துய ருலோ
நாதனை வெறுத்து மகம்சண்ணி யணை வுற்று
நீதகவ முன்னியல்பு சேரும்வகை கேட்
காதலொடு சென்றுயர் கருப்பறிய வூரில் [உரு]

நாடுபுகழ் கோலவளை நாயகியொ டெம்மா
பீடுபெற மேவிய பெருந்தகைமை கண்டா
வாடுமிட ரோடுமுடல் மன்னுமொளி பின்னு
வீடுபெற லாமதனின் மேவுகடி தென்றார் [உசு]

என்றவுட னப்பதியி லேபரிதி யெய்
யொன்றிய மனத்தினொ டிருந்தவ முஞற்றி
பொன்றவில் பெரும்பிழை பொறுத்தவனை புன்
நின்றுவெகு நாளளவு நேயமொ டிருந்தான் [உஎ]

இப்படி யருந்தவ மியற்றுவ துணர்ந்
யப்புமதி வேணியரு ளானன மிலங்க
செப்புமுலை மங்கையொரு பாதிபெறு தே
னெப்புவன மும்புகழ வெய்தியெதிர் நின்றான் [உஅ]

கண்டடி பணிந்திரவி கண்ணருவி பா ய
மண்டுபுள கத்தினொடு வாய்தழு தழுப் ய
விண்டுசெய னெஞ்சுருகி வேர்த்துட னடுங்க ப்
பண்டைமறை கொண்டபுகழ் பன்முறை துதித்தான் [௨௯]

பொற்பத நிராமய புயங்கதர போற் றி
சிற்பர கலாரகித சிற்சொருப போற் றி
யற்புத புராதன வனந்தசுக போற் றி
தற்பர சதாசிவ சபாநடன போற்றி [௩௰]

ஐயவென வேதுதிசெய் யாதவனை நாத ன்
றுய்யவரம் வேண்டுவன சொல்லுகென வெய்யோ ன்
பையரவ செய்யவொளி பண்டைவடி வெய்தி ச்
செய்யெனது தீயபிழை தீரவரு ளென்ன [௩௧]

பெட்பினொடு கீழுறு பிலத்தினிடை நின்றோ ர்
புட்கரணி கோயிலெதிர் போதர வழைத் தே
முட்கவரு பாசமொ டெற்பழு தறுக்கு ந்
தட்பமொடு மூழ்கிலொளி தந்தமுறு மென்ன [௩௨]

பொற்பினொடு சென்றிரவி புட்கரணி மூழ்க ப்
பற்பலவு மெய்யிலுறு பாயொளியு மெய் த
வற்புதமி தற்புதமி தென்றமலன் முன்போய் ச்
சிற்பரம னர்ச்சனைகள் செய்துதுதி செய்தே [௩௩]

இத்தடமு மித்தலமு மென்பெயர் பெறும் பே
றத்தவரு ளென்றிட வளித்தரன் மறைந்தா ன்
புத்தமுத மாமிரவி புட்கரணி சீ ரா
தித்தபுர மென்றுபெயர் பெற்றது சிறந்தே [௩௪]

ஆறுலவு செய்யசடை யையனருள் பெற் றே
மாறுதவிர் வெய்யவனும் வண்பதி யடைந்தா ன்
ஏறுகிர ணப்பரிதி தீர்த்தமகி மைக் கே
வேறுமொரு நற்கதை விருப்புற விசைப்பாம் [௩௫]

பாட்டிலுயர் சங்கமுறு பாண்டிய னன்னாட் டி
னாட்டுபுகழ் கொண்டதொரு நாரண புரத்தி ற்
கூட்டுமறை யோன்விசுவ குத்தனரி பத்த ன்
வாட்டமில் சுசீலையொடு வாழ்ந்துவரு நாளில் [௩௬

ஆர்கலை மறைப்பொரு ளறிந்துசிவ பத் தி
சார்கவுத மன்பரம சைவர்மனை யென் ரு
கூர்மதி யிலாவிசுவ குத்தன்மனை நண்ண ப்
பார்மிசை யெழுந்தடி பணிந்தில னிருந்தான் [௩௭]

அப்படி யிருந்தவனை யம்முனிவ னோக் இ
விப்பிரர் குலத்துவரு மேன்மையு மகன்று ய்
செப்புகிர கத்தர்புரி செய்கையு மறந்தா ய்
தப்புவிதி செய்படிற சாற்றுவது கேளாய் [௩௮]

பூதிபுனை யாதநுதல் போக்குசுடு கா டா
மாதியர ஞமுரை யாதவர்க ளூம ர்
சோதிவிழி தந்தமணி சுத்தமொடு பூணு ப்
பாதக ரொடுத்தவுடல் பன்றியுட லாமால் [௩௯]

நீடுசிவ பூசைதின நேசமொ டியற்று ர்
கோடுமுடல் பாவநிறை கொள்கலம தாகு ம்
வாடுமவ னைம்பொறிகண் மாநரக வாய்த ல்
தேடுமவர் பெற்றநிதி தீயபத ராயால் [௪௦]

அன்னவனை நோக்கினவ ராதவனை நோக்கி ற்
பன்னுபிழை தீருமவர் பான்மையொடு கையா ன்
முன்னுதவு நீரடிசின் மூத்திர புரீட ஞ்
சொன்னசுரை மென்கிருமி சோரிபிண நேராம் [௪௧]

வேள்விபுரி யந்தணர்கண் மேவுபதி யேனு வ்
சோள்விது வணிந்தவிறை கோயிலில தானு ன்
மாள்வினை செயும் புலைஞர் வாடியது வாகு ங்
கேள்வியறி யாதிதி விருந்துமதி கெட்டாய் [௪௨]

நீறுசிவ னக்கமணி நீபுனைவ தின்றி த்
தேறுசிவ பூசைநனி செய்வது மிலாம ல்
வேறுதொழில் செய்துலகில் வீண்வயது போக்கி க்
கூறுநர கெய்தலுறு கொள்கைபல செய்தாய் [௪௩]

ஆதலினின் மேனிதனி லானதொழு நோயு ங்
தீதுபுரி குன்மமொடு தீயபல நோயு ம்
வேதனையோ டுற்றமனம் வெம்பியறி வின்றி சு
சாதலுறு கென்றிவை சபித்துமுனி போனான் [௪௪]

அக்கணமே யரியபிணி யணைந்திடலு மூளங்கலங்கி த்
தக்கமனை யாளுடனே தார்விசவ குத்தன வ
னிக்கொடிய நோய்போமா றெவ்வண்ண மெனவேங்கி த்
திக்குடையா னருளதனுற் றீரும்வகை யதுதோன்ற [௨௫]

அரியயனுக் கரியபிரா னருந்தலங்கள் பலவணங்கி ப்
பரிவுடனே சிவதீர்த்தம் பலவும்வரன் முறையா டி
யுரியவகை தானவித மொண்பொருனிஞற் புரிந் து
திரிதரவு மவனையுறு தீப்பிணிதீர்ந் திலதம்மா [௨௬]

வருத்தலுறும் பிணிதீரா மறையவனு மனைவியொடு ங்
கருத்திலருந் துயர்பொருந்திக் கண்ணருவிப் புனல்பெரு க
விருத்தமுறு முடனடுங்க மிசவாடி மெய்யடியா ர்
பொருத்திய சாபத்துயரைப் போக்கிரிதா மெனப்புலம்பி [௨௭]

பொன்னிநதி வடகரைப்பாற் போந்துமுனை நல்வினையா ற்
கன்னிமதில் புடைசூழுங் கருப்பறிய லூர்மருவி த்
தன்னிகரும் பெருந்தவத்துச் சாண்டிலிய மாமுனி யை
யன்னவனுங் கண்டுமகிழ்ந் தடிபணிந்தங் கிதுசொல்வான் [௨௮]

செனித்தநாண் முதலாகத் திருநீறு புனையா த
மனித்தர்களிற் பதமெனுமென் மனையநனிற் கவுதமனு ர்
தனித்துவர நான்வணங்காத் தன்மையினு லவர்சபித் த
துனித்தகடும் பிணிமுழுதுந் துடைக்குமா றருளென்ன [௨௯]

தாழ்ந்தகுலத் தினரேனுஞ் சங்கரன்மெய் யடியவர்தா ள
வீழ்ந்துபணிந் தவரிகமு மேல்வீடு மெளிதுறுவா ர்
சூழ்ந்துபணி யாருயர்ந்த தொல்குலத்தோ ரெனினுமிக த்
தாழ்ந்தகடுந் துயர்பொருந்தி யருநரகு மேலடைவார் [௩௰]

மாமுனியாங் கவுதமனை வணங்காத தீவினையா ற்
ரேமுறுநோ யுடல்பொருந்தித் துயரமுழந் தனையக் தோ
வேமுறுமுன் மனையின்முனி யெழுந்தருள வெதிர்கண் ட
காமுறுநல் வினையாலிக் கருப்பறிய லூர்புகுந்தாய் [௩௧]

துன்புறுநோய் பலவகற்றுஞ் சூரியபுட் கரணித னி
லன்புடனீ போய்மூழ்கி லருஞ்சாபக் கடும்பிணி போ
மின்பெனவேண் டியவெல்லா மில்லாளோ டினிதருந்தி ப்
பின்பரிய பரவீடு பேருவகை யொடுபெறுவாய் [௩௨]

என்றுமுனி யருள்புரிய வினிதிறைஞ்சி விடைகொண் டு
தூன்றுமது மலர்பொதுளுஞ் சூரியபுட் கரணிதனி ற்
சென்றுபரி வுடன்மூழ்கத் தீயவுடற் பிணியுட னே
யொன்றுமிவன் பாவவித மொழிந்தனமுன் புரிந்தவெலாம் [௫௩]

புனன்மூழ்கிப் பிணியகன்று பூசானு மதிசயித் து
மனமகிழ்ந்து சாண்டிலிய மாமுனிவன் பதம்வணங்கி ச்
சினவிடையா ராகமஞ்சொல் சிவதீட்சை பெற்றதன் பி
ன்னகவுருத் திரமணியு மருநீறு முடலணிந்து [௫௪]

பிழைபொறுத்த பிஞ்ஞகனுர் பெரும்பூசை யினிதியற்றி த்
தழைமலர்சசே டிவணங்கித் தலத்தில்வெகு நாளிருந் து
மழைமதர்த்த கருநெடுங்கண் மனையாளுங் கதியெய் த
விழைவறுத்த பரபோக வீட்டுநெறி மேவினனல் [௫௫]

தோய்ந்தார்மெய்ப் பிணிநீக்குஞ் சூரியபுட் கரணித னி
லாய்ந்தார்வ முடனொருநா ளாடிலிரும் பொருளுண்டா ம்
வாய்ந்தாதி வாரத்தில் வந்துபடிந் தார்பகையை க்
காய்ந்தாழி யுலகாள்வர் கதிர்வார வத்தமதில் [௫௬]

கண்டவரா கண்டலனூர் காமுறுவிண் ணுலகாள் வ
ருண்டவர்நா மகளிதழ்த்தே னுண்டவய னுலகாள்வ ர்
மண்டலநீர் மூழ்கினவர் மண்டலையன் றளந்தவர்சீ ர்
கொண்டதினந் தொறுமூழ்கிற் கூடுபலன் கூறரிதால் [௫௭]

போற்றியபூ ருவநிம்ப புட்கரணி செங்கழுநீர் ச்
சாற்றுதடந் தென்றிசையிற் சங்கதடம் வடதிசை யி
லாற்றியபொற் றுமரையு மநுமதட முங்குடக்கி ன்
மாற்றரிய வடமேற்கில் வசிட்டதடந் தினம்விளங்கும் [௫௮]

இவ்வகைய தீர்த்தத்தி லாரேனு மூழ்கினவ ர்
செவ்வியபோ கங்களெல்லாஞ் சிந்தைகளிப் புடனருந் தி
வெவ்வியதீ வினைத்தொகையை வீட்டியருள் வழிகாட் ட
நவ்விவிழிக் கோலவளை நாயகன்சே வடிபுகுவார் [௫௯]

முனிவரர்தம் பெயர்விளங்க முயன்றுதிசை தொறுமமைத் த
புனிதவெழு பத்திரண்டு புண்ணியதீர்த் தங்களிற்போய் க்
கனிவுடனே தோயுமவர் காமமுத லறுபகையி ன்
றுனியகலப் பரவீட்டிற் சுகவாரி தோய்வாரே [௬0]

தீர்த்தச்சருக்கம் முற்றிற்று—ஆகச்செய்யுள் [௧௨௭]

# இரத்தினகிரிச் சருக்கம்.

தீர்த்த மான்மிய மெனச்சொ லாரமுது சேர வுண்டுசென னத்து று
மார்த்தி போனதென மகிழு மாதவர்மு னரிய சூதமுனி தானரு ள
மூர்த்தி ரத்னசிக ரச்சி றப்பொருவர் முற்று மோதுவது முற்று மோ
வோர்த்து வந்தமுறை யுரைசெய் வேனிதை யுவந்து கேண்மினென வுரை
செய்வான் [க]

மேரு மால்வரையின் முன்னொர் நாளமரர் மேவி யன்பொடமர் காலையி ற்
சீரு லாவுமுர கேச சேடனெதிர் சேர வங்கவனை வானவ ர்
நீரு லாவுகடல் மேரு வேழசல நேமி வாளகிரி நீடுபோ ர்
தாரு லாவுபண மகுடம் வைத்துயர்வு தங்கு கின்றபணி நாயகா [உ]

என்று கூறுதுதி கண்டு வாயுவிவன் யாரு மேபணி யெனச்சொல் வா
ரொன்று காலுமில னுரைகொள் காதுமில னேது தாலுவு மிரண்டுளா ன்
சென்று மேவிலகு கதியி லன்கறைக் கொடிய வன்குடில முள்ளவ ன்
நன்று நன்றுதுதி செய்த தென்றுரக னுண வேமிகவு நகைசெய்தான் [ங]

நிந்தை செய்பவனை யாதி சேடனொரு நிலையி லாமலலை குவைபோலா க்
கந்த மேவிமதி மந்த னாகிவரு காம வேடனை யிடும்பையா ல்
முந்து தீயருற வுற்று ளாய்கெடுகி முனிவர் கட்டவசை வற்றுளா ய்
சிந்தை தன்னின்மத மென்னை யென்றுநனி சீறி யின்னுமிது கூறுவா ன்

திங்கள் வேணியர்மெய் யணியு மாவனவர் செங்கை வார்சிலையி னுமெனத்
தங்கி டாதுவிடி லமரர் மாதரொவர் தந்த மங்கிலிய நாணு ளா
ரங்கண் வானவர்க ளுன்மி குந்தகுண மாயி ராமலமு துண்ப ரோ
விங்கு நீயெனெதி ரவை யோவனில வென்று தன்பெருமை கூறவே [ரு]
[மோ

வாயு வில்லையெனி லோதல் பாடனிலை வருதல் போதன்முதன் மன்னு
வாயு வுள்ளவர்க ளெவர்கள் காசினியி லன்ன முண்டுடலம் விம்மு மோ
நீயு முன்னமொரு மாவி யாகரண நேர்மை யோடுரைசெய் நீர்மையு ந்
தோயு மென்னசைவி னுகு மென்றுலவை சொல்ல வெல்லலுறு சேடனும்

ஆட கக்கிரியி னீடு சேகர மனைத்தை யுங்கண பணத்தினு ன்
மூடி வைப்பனதை நீதி றந்துவிடின் மொய்ம்பு ளாயென வியம்பி யே
ஓடி வெற்பின்முடி மூட நீளுலவை யோசை யோடுபகி ரண்ட மா
கூட மிற்றமிதன வேக முற்றுவலி கொண்டு சண்டவலி யாகியே , [எ]

நேரி லிக்கிரியை மூடு சேடவினி நில்ல டாவெனமுன் மோத வே
வாரி வற்றியது வடவை கெட்டமதம் வற்றி யட்டகெச மத்தக ஞ்
சோரி கக்கின குலாச லத்தொகுதி தூளி பட்டதிடி பட்டபா ர்
காரி யுற்றபொழு தென்று மானிடர் கலக்க மோடுடல் விதிர்ப்பரால் [௮]

மோது கால்விசையி னொருப ணத்தளவு மூந்து சேடனசை யாதுகா ல்
வாத மானவுன தாண்மை யென்னை செல வல்ல தென்றசதி யாட வே
சோத னுவசன வாரி மண்டலை சுமந்து காசுபெறு முனது கை
யாத காதென வகந்தை பேசிவளி யாண்மை யாலிதனை யேசுவான் [௯]

மேவ பானகிரு கரத னஞ்செய வியான கூரும சமான னு
நாவ தானனுபர் தேவ தத்தனொடு நாக னுடிய பிராண னு
மோவில் காயமுட னண்ட பூதமெனு முலவை யுஞ்சிறிது மசைவி லா
தாவி போனவுடல் போல மண்ணுல கடங்க லுஞ்செய லடக்கினன் [௰]

ஆன காலைதனின் வாச வன்பிரம னமர ரானவர்கள் சேடன்மு ன்
ஈன மாயுலக நாச மாவதிதை யின்று நீநிலை நிறுத்தினு ல்
ஊன மோபுகழை மேவு வாயுலகு முய்யு மென்றுமுக மன்சொல க்
கூன லானபட மிருப தேழைமலை கோடு காண்வகை திறக்கவே [௧௧]

அத்து ணைக்குளதி வேக மாயுலவை யரவு விட்டசிக ரங்களோ ர்
பத்தொ டேழுமொரு பத்து மேயொலி படப் பிடுங்கியுள திசைதொ று
மொத்து வீசவொரு ரத்ன சேகரமிவ் வூதி காரணிய மேயு ற
வைத்த னன்கயிலை தென்றி சைப்புவியில் வந்த தென்றுலகர் சொல்லவே

துட்ட நிக்கிரக சிட்ட பாலன சுகத்தை யின்றுமுத னீபுரி ந்
திட்ட மானமணி சிகர மீதினி திருத்தி யென்றுரக பூடண ச்
சட்டை நாதனை நிறுத்தி வைத்துமை தனக்கு ஞானவுப தேச மே
மட்டி லாவருளி னுலு ணர்த்தியரன் மன்னி மறறதனில் வைகினன் [௧௩]

தெண்டை யங்கணுமை மகிழ ஞானமருள் கெர்ப்ப ஞானபர மேச னை
மண்டு செங்கிரண பரிதி பூர்வதிசை மருவு காலைபகல் மாலையி ற்
கண்டு நின்றுதொழு கின்ற பேருருகு காத லோடுதுதி செய்தபே ர்
விண்டு மும்மலமு மண்ட ரண்டனடி மேவி யின்பமுறு வார்களே [௧௪]

அன்ன மெய்க்கிரியை நன்ன ராசையொ டனேக தூரமிடை கண்ட பே
ருன்ன லுற்றவர்கள் பேரு னாத்தவர்க ளோது பேர்செவியி லுற்றபே ர்
பின்ன லுற்ற சென னப்பி ணக்கறுவர் பேதை பாகனுரு மேவு வா
ரின்ன சொற்குமலை வில்லை வில்லைமலை யென்று கொண்டவன தாணையே

இரத்தினகிரிச் சருக்கம் முற்றிற்று—ஆகச்செய்யுள் [௧௪௨]

# முனிவரர் பேறுபெற்ற சருக்கம்.

சேண்டொட வுயர்மணிச் சிகர மேன்மையைத்
தூண்டிய விளக்கெனச் சொல்ல வுய்ந்தன
மீண்டின மொருகதை யியம்பு வாயெனக்
காண்டகு சூதனிக் கதையைக் கூறுவான் [க]

கங்கைவெண் டிரை நுரை காட்டு செஞ்சடை
யங்கண ருருயிர்க் கருள வெண்ணியே
பொங்கிய கருணையின் பொலிவு போன்றதால்
தங்கிய வெள்ளியஞ் சயில மானதே [உ]

அனுபவங் குருவரு ளாக மத்துணா
யெனுமிவை மூன்றுமொத் தின்ப மாந்தியே
தனுமுத லசத்தெனத் தணந்த ஞானிகண்
மனமென விளங்குமக் கயிலை மால்வரை [ங]

பாசிலை நறுந்துழாய்ப் படலை மார்பினன்
வாசவ னன்முகன் வளர்த்த கீர்த்திக
ளீசனே பரமென வேய்ந்த வாறுபோற்
றேசமர் கயிலையஞ் சிகர மோங்குமால் [ச]

கண்ணனைத் தாங்கலிற் கடைப்பட் டோமுமை
யண்ணலைத் தாங்குறி னணையுஞ் சீர்த்தியென்
றெண்ணியப் பாற்கடல் லேய்ந்த வாறென
வண்ணமெய்க் கயிலைமால் வரை விளங்குமால் [ரு]

மறுவறு பனிக்கதிர் மதிக் குழாமெனச்
செறியுமிக் கயிலையஞ் சிலம்பிற் கோர்புடை
யுறுதவ மணுவள வுஞற்றி லத்தவம்
நெறிதரு மேருவி னிகழு மோர்வனம் [சா]

சந்தனஞ் சண்பகஞ் சாலங் குங்குமம்
செந்தளிர்ச் செயலைக டப மாமரங்
கந்தமென் மலர்த்திரள் கமழுங் பூங்கொடி
யுந்தமில் கனிகிழங் கமுகின் வைகுமால் [எ]

கடங்கவிழ் கரிசிரத் தினவைக் காய்சி ன
மடங்கல்வள் ளுகிர்கொடு வருடு மாம யி
லடங்கலில் பீலியை யால வட்டமா ய்
விடம்படு பணிக்குறும் வெயில் மறைக்குமால் [அ]

மற்றுள விலங்கின மருவும் புள்ளின ஞ்
செற்றம தின்றியே சேர்ந்து வாழுமா ங்
குற்றிடு பலவள முனைக் கடங்கு ரு
கற்றவர் வியக்குமவ் வனத்தி னுப்பணில் [௯]

இளகிய தமனிய நிலத்தி னின்சு வை
யளவிய வாரமு தார்ந்த பூந்தட ம்
வளமலி யாடக வனச மும்ப ல
வுள்மகி ழோதிமந் திகழ வுள்ளதால் [௧௦]

வண்டின மிசைபல முரன்று மாமல ர்
வெண்டுகெண் மேனியில் விரவி யன்பு ள
தொண்டர்க ளெனப்பயில் சோலைத் தண்ணிழ ல்
மண்டிய தடக்கரை வந்து முன்னொர்நாள் [௧௧]

அங்கிரா கவுதம ராங்கி ராமு னி
மங்கலில் கோதமர் வாம தேவர் சா
பங்கர்சாண் டிலியர்கா பாலி காசிப ர்
தங்குகாத் தியாயினர் சனகர் கண்ணுவர் [௧௨]

குச்சரத் திரிசனற் குமரர் பப்பு ரு
வச்சர்பாற் கவர்கவுண் டினிய மாமு னி
யச்சமில் சனந்தன ரானி மாண்ட வி
யிச்சையிற் சனாதன ரிவர்க ளாதியாய் [௧௩]

வருமெழு பத்திரு மாத வத்தி னே
ரொருமையோ டருந்தவ முஞற்றி னார ரு
ணிருமலன் றோன்றியே நீவிர் செய்தவ ப்
பெருமையா முவந்தனம் பேசக் கேட்பிரால் [௧௪]

யூதிகா வனஞ்சிவ தலங்க ளூற்றவ ற்
ரூதியே யுத்தம மாகு மங்கதி ற்
சோதிசே ரிலிங்கமாய்ச் சுயம்பு வாமதி ன்
மாதுகோல் வளையொடு மகிழ்ந்து வைகுவாம் [௧௫]

அத்தலத் தருந்தவ மணைந்து செய்யினு ஞ
சித்தசிந் தனைப்படி செய்து நாமெ ன
நித்தனு மறைந்தன னிலவு மெய்த்தவ ர்
மெத்திய வுவகையாம் வேலை மூழ்கியே [கசு]

ஒல்லென யூதிகா வனத்தி லுற்றன ர்
நல்லவைங் கரநதி மூழ்கி நான்ம றை
சொல்லிய நித்தியத் தொழின் முடித்தபி ன்
எல்லிய நதிக்கரை யிருந்து மாதவர் [கஎ]

ஒருபதப் பெருவிரற் பாரி லூன்றி மே
லருணனை முகங்கொடு நோக்கி யஙகி யை
வருதிசை நான்கினும் வளர்த்தி நாப்பணி ன்
றிருமையி னருந்தவ மியற்று வார்சிலர் [கஅ]

நிலத்தொரு பதமுற நீண்ட வோர்பத ம்
நலத்துட னுயர்த்தியு நான்ற கைக ளை
வலத்துட னுயர்த்தியு மன்னு கால்விணி ற்
செலுத்தலை நிலத்துறச் சேர்த்து வார்சிலர் [கக]

கொண்டல்பெய் மழையினிற் கோடை வந்தநா
மண்டிய வெயிலினில் வாடைக் காற்றினி ற்
றண்டுளிப் பனியினிற் சலனமின்றி யே
விண்டொடு மலையென மேவு வார்சிலர் [உ0]

பங்கயா சனப்படி பதமமைத் திரு ந்
தங்கணு சியினுனி யமர வைத்துமெ ய்
பொங்குபே ரன்பொடு பூத நாதனு ஞ்
செங்கையா னிடத்துளஞ் செலுத்து வார்சிலர் [உக]

இந்திர கோபமொத் தியல் பிராணனை ச்
சந்திர சூரிய கலையிற் சார்வு று
துந்திய சுழுனையூ டுற நிறுத்தி யே
அந்தண்மா மதியமு தருந்து வார்சிலர் [உஉ]

ஒப்பரு முனிவர ருவந்து பற்ப க
லிப்படி யருந்தவ மிருந்தி யற்றிட த்
துப்பெனச் சிவந்தொளி துலங்கு வேணி யி
லப்புனைந் தருளிய வாதி யுன்னியே [உங]

சிறுபிறை யூற்றமு தென்னச் சென்னி மே
லுறுநதி யொலியெழ வொளிரு மப்பி றை
நிறைவென முகமதி நிலவ வம்மதி க்
கறைதிரண் டிருந்தெனக் களத்தி னஞ்சுற [உச]

இருவிழி யருட்கட லெழுந்த திங்கள்போ ன்
மருவிய வெண்குழை காதின் மன்னிட த்
தருகுழை மதியினைச் சாரு மானென ன
வொருகர மேந்திய வுழை யிலங்கவே [உரு]

தவளவெண் குழைமதி தரு நிலாவென ப்
பவளமெய்ந் நீற்றொளி பரம்ப வம்மதி த்
திவளொளிக் கொதுங்கிய திமிர மாமென க்
கவளவெண் களிற்றுரி முதுகிற் காணவே [உசு]

கைம்மல ருறுகனல் கடகப் பன்னக ப்
பைம்மணி யொளியெனப் பரந் திலங்கிட ச்
செம்மலைத் தமனிய வருவி சேர்ந்தெ ன
வம்மல ரிதழியி னலங்கன் மார்புற [உஎ]

பொன்னகற் பொலிவிளக் கென்னப் பூண்களா ம்
பன்னகப் படமணி யிலகப் பாந்தளி ன்
றுன்னுநுஞ் சிடையிடை தோய்பொன் னுடைபோ ல்
வன்னவன் புலியத ளரையில் வாய்க்கவே [உஅ]

நான்மறைச் சில்லரி நாத நூபுர ந்
தேன்மலர்ச் சேவடி யிணையிற் சேர்ந்து ற
மான்முதற் பண்ணவர் வாழ்த்திப் பன்மல ர்
மேன்முகின் மழையென வீசி யார்ப்பவே [உகூ]

சொரிமல ரளியெனக் கணங்கள் சூழ்ந்திட ப்
பரிவுட னரம்பையர் பாடி யாடி ட
யிருவிசும் பிடைப்பல வியங்க ளார்த்தெழ த்
திரிமல விருளெலாந் திசைவிட் டோடவே [௩௰]

கொந்தவிழ் பூங்குழற் கோதை கோல்வளை க்
சுந்தரி வலமுறச் சோதி நாய க
னிந்தனங் கடைந்திட வெழுந்த வன்னி போ
லந்தநற் சுயம்புவி னையன் றோன்றினன் [௩௧]

எழுந்தரு ளிறையவ னிலங்கு மேனியி றீ
பொழிந்திடு பேரெழிற் பொலிவைக் கண்கள்செ ன்
றழுந்திட நோக்கின ரரிய மாதவ ர்
விழுந்தன ரெழுந்தனர் விம்மி யார்த்தனர் [௬௨]

ஆடினர் களித்தன ரவச மாயின ர்
நீடிய பவக்கட னீந்தி னேமென க்
கூடின ரஞ்சலி குவித்துச் சென்னிமே ற்
சூடின ருருகினர் துதிக்க லுற்றனர் [௬௩]

நாதா நீதா சரணந் திகழும் நாகா பரணா சரணங் கமழு ந்
தாதா ரிதழிச் சடையாய் சரணந் தாமோ தரனா யகனே சரண ம்
போகா காயா சரணந் தவளப் பொருமால் விடையாய் சரணம் புகழு ம்
வேதா கமநூன் முடிவே சரணம் வினையா ணவமா சகல்வாய் சரணம் [௬௪]

பல்லா ருயிரின் பரமே சரணம் பரையா நீதப் பொருளே சரண ங்
கல்லா னிழலிற் குருவே சரணங் கருணைக் கடலா ரமுதே சரணம் [ணம்
மல்லார் மதமா முகனைத் திறல்வெண் மயில்வா கனனைப் பெறுவாய் சர
வில்லார் கனகச் சிலையாய் சரணம் விண்ணோ ரறியா விமலா சரணம் [௬௫]

உருவே யருவே யொளியே சரண முமைகோல் வளையாள் கணவா சரணங்
கருவே தனைவேர் களைவாய் சரணங் கமலா சனன்மால் காணாப் சரணஞ்
செருவார் புலியி னுரியாய் சரணந் திகழ்வெண் மதிமா லையனே சரண ம்
பொருவே ளுடலந் தெறுவாய் சரணம் புகழ்வா ரிதையம் புகுவாய் சரணம்

என்றே துதிசெய் தவரைப் பரம னினிதாம் வரநீர் மொழிவீ ரென லு
மன்றே முதலின் றளவுஞ் செனனத் தடியே மலைபட் டுனைவிட் டன மா
வின்றே பரவீ டருள்வாய் சிவனே யெமதா ருயிரே யெனவே புக ல
நன்றே யுயரிப் பதியிற் சிலநா ளண்ணப் பினைமெய்ப் பரவீ டுறுவீர் [௬௭]
[ரும்
என்னா வருள்செய் திறைவன் மறைய விதையங் களிகூர் முனிவோர் பல
பொன்னூர் தடமுஞ் சிவலிங் கமுமே புகழ்சேர் தத்தம் பெயரா லமை யா
முன்னா கமநூல் விதியின் படியே முதிரன் பொடுபூ சனைசெய் தனர் பி
னுன்னா துயரும் பரனே யமதா மொருவீ டதனி லினிதெய் தினரால் [௬௮]

முனிவரர் பேறுபெற்ற சருக்கம் முற்றிற்று.

ஆகச்செய்யுள் ௧௮௦

# இராவணச் சருக்கம்.

மிக்க மாதவர்கள் பேறு பெற்றகதை யீது வெம்பிறவி வேரற த்
தொக்க பாசதிமி ரந்து றந்துசிவ சோதி கண்டுசுக வாரியு ட்
புக்க வாழ்வுபெறு மந்த ணீர்கடற் பொருந்தி லங்கையிறை யிராவண ன்
தக்க ரத்நகிரி யரனை யர்ச்சனைசெய் சரித நாமினிது சாற்றுவாம் [௧]

அருள் கனிந்தொழுகு வதனன் மிக்கதவ மார்பு லத்தியமெய் மாமு னி
மருவு நன்மனைவி யில்ல றத்தினொடு வாழு நாண்மகவி லாமை யா
லிருள கன்றொளிரும் வெள்ளி மால்வரை யிடத் தடுத்ததோர் வனத்திலே
பெருகு நற்றவ முயன் றிருந்தனர் பிரா னெழுந்தருளி வந்தரோ [௨]

ஏது நீபெறு வரம் பகர்ந்திடுதி யென்று நாதனுரை செய்த லு
மாது பாகர்பிதிர் தேவர் தங்கள்கடன் மாறி லாதுசெய வல்லனுய் த்
தீது மேவியபுன் னுக வன்னரகு சேரொ ணுவகைசெய் மைந்த னை
ஈதி யென்றிடலும் யூதி காரணிய மென்றோர் நல்லதல முண்டதில் [௩]

மேவி நீதவ மியற்றி லுன்மனம் விரும்பு கான்முளை யளித்துமெ ன்
றுவி தோறுநிறை வாய் மலர்ந்துமுதி ரன்பர் காணுமிறை மறைதலு ங்
காவி போலும்விழி யாளும் வந்தரிய கன்ம நாசபுரம் நண்ணி யே
மாவி நாயக நதிக்குண் மூழ்கிநிய மம்பு ரிந்துசிவ னுலயம் [௪]

எய்தி யங்கணனை யடி பணிந்துதவ மேதி லாண்டுபெதி னுயிர ஞ்
செய்து றைந்திடலும் நாத னங்கது தெரிந்து கோலவளை யாளுட ன்
பொய்த விர்ந்திலகு வதன முக்கணதி பொதிச டாமகுட மான்ம மு
மெய்து லங்கமுனி மங்கை காணவெதிர் மேவி நின்றினிது கூறுவான் [௫]

புத்தி மேவுசிவ பத்தி சேர்முனி புலத்தி யர்க்குரிய பாரி கே
ளுத்த மத்தல மிதிற் பெருந்தவ முஞற்ற லான்மன முவந்தன [ய்ப்
முத்த ரைக்குமொரு குரிசி லாயுலைவின் மொய்ம்பு கொண்டபல சாலியா
பத்து மெய்த்தலை படைத்து மாமறை பயின்றோ ரேழிசையும் வல்லனு ய்

ஒங்கு மைந்தனை யுனக்கு நாமகிழ வுதவி னேமென வுரைத்த னை
ரங்கு நின்றுமறை வாக நங்கைமன மார்வ மாயுடல் வணங்கிவா ய்
பாங்கு கொண்டதுதி செய்துநீங்கிமுனி பன்னி யாச்சிரம நண்ணி யே
நீங்கு நற்கணவ னேடு நாதனருள் செப்பி யன்பினெடு வாழுநாள் [௭]

அமுத வாரிகடை யப்பி றந்தவட வால காலநிக ராக வே
குமுத வாய்வனிதை முனிவன் மாதினிடை கோல ராவண னுதித்தன ன்
விமுத மானகலை கற்று வானவரை வென்று மூவுலகு மேவி யே
சுமுக வான்மகளி ரேவல் செய்யவொரு துன்பு மின்றியர சாளுநாள் [அ]

நீல வாளரவு நஞ்ச ளித்ததொரு நீர்மை போலவொரு மைந்த னை
ஞால மீதுபெற மேக நாதனென நாம முற்றவனை லாரையு ஞ்
சால வேபொருது வாகை சூடியுயர் சக்ர வாளகிரி மட்டு மோ
வேலு மண்டமள வுந்த னுதிசையை யேற்றி வேற்றரசை மாற்றினான் [கூ]

வித்த கத்தனுவி னுகர் கோனையமர் வென்ற பின்புபெய ரிந்தி ர
சித்தெ னப்பெறு சமர்த்தன் மற்றுமுள திக்கு பாலர்களை வென்றோர் நா
ளுத்த மத்தொளிர் விமான மேறிவிணி னூடி லங்கைநகர் சேருவா ன்
பத்து டைத்திசை நடுங்க வந்துதடை பட்டு நின்றனன் விமானமேல் [க ]

கொன்னே சீறிக் கண்கனல் சிந்தக் கொடியோ னு
மென்னே யீதென் றெங்கணு நாடி யிகல்வர்ரை த்
தன்னேர் காணு னிந்திர சித்துந் தடுமாறி ப்
பொன்னேர் மானந் தன்னி னிறங்கிப் புவிவந்தான் [கக]

வந்தா தித்த யாநக ரீசன் மகிழ்கோ யி
லந்தோ கண்டா னஞ்சின னுள்ள மயர்வாகி ச்
செந்தார் மான மாலய மீதிற் செலலா லே
நந்தா நீழல் பட்டத னுலிந் நலிவென்றான் [கஉ]

இங்கிது தீரு மாறிது வாகு மெனவுன்னி ச்
சங்கின மாரு மைங்கர னூறு தனின்மூழ்கி க்
கொங்கல ராலே கோல்வளை யாளோர் கூறுகு ந்
துங்கவ னுதி யர்ச்சனை செய்தே துயர்போனான் [கங]

திருந்தேர் மானஞ் சேண்டனிற் செல்லுஞ் செயல்கண் டே
பொருந்போர் வல்ல விந்திர சித்தற் புதமெய் தி
வருந்தா தென்னை யாளு மிலிங்க மகத்தே வை
யிரும்பா ருன்னு மிலங்கையில் வைப்ப னெனவுன்னி [கச]

தீப மென்று மின்மினி வைக்குஞ் சிறுபுள்ளு த்
தாப முள்ள வடவைத் தீபந் தருமென் று
கூப மன்ன பஞ்சரம் வைக்குங் குணமென்ன ப்
பாப மன்னன் றேவை யகழ்ந்து பரிவானான் [கரு]

அகழ்ந்தே சிற்கும் வேளையி லீச னருளன் தி
யிகழ்ந்தே செய்யு மிக்கிது செல்லா தெனவா னி
னிசழ்ந்தோ ரின்சொல் வந்திட நொந்தே நிமலன்சி ர்
புகழ்ந்தா ரெய்தாப் புத்தி யிழந்தே பிணமானான் [கசு]

வாரி யழுந்து மூமர்க ளென்ன யகனூற் ற
வாரஞர் சொல்லப் பச்சிம காழி யதில்வர் தே
சீரிய லங்கை ராவண னன்றே சிவனூ சை
யேரிப லன்பிற் செய்தது நாத னெதிர்நின்றான் [கஎ]

தண்ணார் கங்கை மாமதி கொன்றை சடைமேல க்
கண்ணார் நெற்றி யாருமெவண் ணீறு கதிர்வீ ச
வெண்ணா ரஞ்சு முத்தலை வேலி னெழில்வீச ப்
பெண்ணோர் பங்கின் மேவமுன் வந்த பெருமானை [கஅ]

இலங்கை மன்னன் கண்டே மண்மீ தினில்வீழ்ந் தே
யுலங்கொ ணெஞ்சம் வெண்ணெய் போல வுருகாநி ன்
றலங்கு மெய்யோ டஞ்சலி செய்தே யமையா து
துலங்கு கண்ணீர் சோர்தர நின்று துதிசெய்வான் [கக]

அஞ்சா தெய்துங் காலனை யட்டே யருள்செய் தா
யெஞ்சா நஞ்ச மாரமு தென்ன வினிதுண் டா
யுஞ்சே பஞ்ச பாணனும் வாழ வுயிர்ந்தா ய்
மஞ்சார் திண்ண னெச்சி லுவந்தாய் மதிசூடி [உ0]

சிவனே யன்பர் வாழ்வே யெங்கள் சிவலோ கா
பவனே யனபர் காணா வின்பே பணிவூ று
மவனே யென்றன் கான்முளை செய்யு மபரா த
மிவனீ யுள்ளங் கொண்டு பொறுத்தா ளெனலோடும் [உக]

மறைதேர் கின்ற விராவண கேளுன் மகனானே ன்
சிறியோ னன்றி நீவழிபாடு செயலா லு
நெறிசேர் குற்ற மியாவையு முள்ள நினையேமெ ன்
றிறையோன் விள்ள மைந்த னெழுந்தா னெழலோடும் [உஉ]

பிறைத்தார் கொள்ளும் நம்பா மைந்தன் பிழைதன்னை ப்
பொறுத்தா யிந்த வேது வாலிப் புவிவாழ்வா ர்
மறுத்தா னின்றி யேதுதி செய்ய வருகுற்ற ம்
பொறுத்தா னென்னும் பேரினை யென்றும் புனையென்று [உங]

ஒருசேய் நெஞ்சின் ஞான மளிக்கு முபர்வா லே
பரனே நின்பேர் கொர்ப்ப ஞான பரனெனன் ன
வருபேர் கொள்ளென் றோதலு மன்ன வரசல் கி
யரனு ரிலிங்கந் தன்னுண் மறைந்தா ரகலாதே [௨௪]

அன்ன தலத்தின் மெய்மை யறிந்தே யரனூர்செ ய்
யின்னருள் பெற்றே யற்புத முற்றங் கிசைபாடி த்
தன்மகன் முன்னே மானம தேறித் தனிசெல் ல
நன்னய மன்னு மிராவண னுந்தன் னகர்போனன் [௨௫]

இராவணச் சருக்கம் முற்றிற்று—ஆகச்செய்யுள் ௨௫

## அநுமச் சருக்கம்.

பராபரர்க் குவந்துபூசை பத்தியோ டியற்றி ய
விராவணற் களித்தபே றிதென்றுபண் ணவர்க்குமு ன்
புராணமெய்க் கடற்படிந்த போதகுத மாதவ ன்
னிராமயச் சுகத்தமுந்தி நின்றோர்காதை யோதுவான் [௧]

முன்னமாலி ராமனாகி மொழிகைகேசி கொடுமையா ன்
மன்னுகானி னூடுசென்றோர் மாதுகார ணத்தின ற்
றுன்னுவான ரக்குலங்கள் சுற்றுதானை யாமுநீர் ச்
சென்னிலாவு மலைகள்கொண்டு சேதுவொன்று கட்டியே [௨]

இலங்கைவாழ ரக்கர்வந் தெதிர்த்தபோ திலங்கவ ர்
கலங்கவாளி கொண்டுகும்ப கர்ணனாதி யோர்களை த்
துலங்கவென்று மூலசேனை தூளியாக வாளியெ ய்
தலங்குவாரி சோரிவாரி யாகவேக மாகியே [௩]

கறுத்தராவ ணன்சரங்கள் கண்டதுண்ட மாயி ட
மறுத்தவன் சிரங்கள்பத்து மலைகள்போ லுருண்டி ட
வறுத்திலங்கை வீடணற் களித்தலர்ந்த பங்கைய ம்
வெறுத்துவந்த சீதைதன்னை மீட்டுவாகை சூடியே [௪]

இந்த்ரசித்தை வென்றதம்பி யினியசீதை யநுமன்மு ன்
வந்தசேனை யோடிராமன் மன்னுசேது வுற்ற பி
னந்தராவ ணன்புலத்தி யற்குமைந்தன் வேத மு
முந்தவோதி னனவன்றின் முடிதடிந்த செய்கையால் [௫]

பேசுபாத கந்திரண்டு பிரமகத்தி யாகி யே
தேசுலாவி ராமர்பின்பு சென்றுநின் றதட்டி யே
நாசிநீளு யிரப்பெறிந்து நயனமங்கி சொரிய வே
யாசையெண்மர் நடுநடுங்க வண்டமுட்டி யார்த்ததே [சு]

நீக்கொணாத பிரமகத்தி நேர்தல்கண் டிராமனு ம்
போக்குமாற தென்னையென்று புத்திதன்னி லெண்ணி யே
தூக்குலாவு வேதகீத சோதிலிங்க பூச னை
யாக்கியீதொ ழிப்பனென்ன வநுமனோடு கூறுவான் [எ]

வாயுமைந்த நல்லிலிங்கம் வல்லைகொண்டு வாவெ ன
வாயிரண்டு கன்னலுக்கு ளதுகொணர்ந்து தருவனெ ன்
ஃறயகன்று வேகமாக வெங்குநாடி யுத்தர ம்
போயிலிங்க நன்றுகண்டு புக்கெடுத்து மேவுமுன் [அ]

அநுமனின்னும் வரவுமில்லை யாதிலிங்க தாப ன
மினிதுசெய்யும் வேளையீதி லக்குவாவெ னக்கவ ன்
றுனுசரா சரங்களீச னுற்றமேனி யாதலா ன்
னனியவாலு கத்திலிங்க நாமியற்று வோமென [கூ]

நல்லவெண் மணற்குவித்து நாதனாக மங்களி ற்
சொல்லும்வண்ண மிலிங்கபூசை சோர்விலாது செய்த லு
மல்லல்செய்த பிரமகத்தி யன்றழிந்து போனதா ல்
வல்லசங்க ரன்பதங்கள் வாழ்த்திராமன் வைகினான் [க0]

ஆனகாலை நல்லிலிங்க மநுமர்கொண் டிராமன்மு ன்
ஈனமின்றி வைத்திறைஞ்சி யான்விரைந்து சாருமு ன்
சேனைமன்னன் வேறொர்பூசை செய்ததென்னை யென்றுள த்
தூனமேவி யேவிசார முற்றுநைந்து வெம்பவே [கக]

வெம்பிநைய்யு மநுமகேளுன் மேன்மையா மிலிங்க மு
நம்புபூசை செய்துமென் றிராகவ னுரைத்தலு ஞ்
சம்புமுன்பு பூசைகொண்டு தங்குகின்ற தாணு வை
வம்பகந்தை கொண்டுநீண்ட வாலினால் வளைத்தரோ [கஉ]

பிடுங்குகின்ற போதிலெங்கள் பிஞ்ஞகன்ற னாணை யா
னடுங்கிவாயு மைந்தனெஞ்ச நாணிஞான மற்றுழ ச்
சொடுங்கிவீழ்தல் கண்டிராம னுள்ளநொந்து தேவனு க்
கிடும்பைசெய்த தன்மைதன்னை யெண்ணியெண்ணி யேங்கினான் [கங]

அழிவிலாது ஞானமாகி யசலமா யகண்டமா
யொழிவிலாத பூரணத்தி னேசிவ கோடியின்
விழியுமாகி மேலுமாகி மேவுமீசன் மேனியைப்
பழுதுசெய்ய விவனினைந்த பாவமென்ன பாவமே [௧௪]

என்றுமட்டி லாதவின்ன லெய்தியே தெளிந்துபொன்
மன்றினட்ட மிட்டதேவன் மன்னுபொற் பதம்பணிந்
தன்றுசித்த சோகமோடுள் ளறிவுபோன வநுமனைச்
சென்றெடுத்தி ராமன்மைய றேற்றியின்ன செப்புவான் [௧௫]

அரியபாத லங்கடந்த வடியுமண்ட கோடிமேற்
பெரிதுசென்ற வேணியுங்கொள் பிஞ்ஞகன்றன் மேனியி
லுரியநீசெய் கருமம்விண்ணி லுயருமம்பொன் மேருவைக்
கிருமியொன் றசைக்கவந்த கெழுமல்போலு மநுமனே [௧௬]

வந்தமெய்ச் சிவத்துரோக மாறவே தவஞ்செய்யென்
றந்தவாயு மைந்தனேகி யங்கணுத்த மத்தொடு
தந்தலிங்க மதனையன்று தாபனஞ்செய் தர்ச்சனை
முந்துமன்பி னோடுசெய்திம் மூர்த்திதன்னை யாவரும் [௧௭]

முன்புவந்து தொழுகவென்றன் மூர்த்தியம்பு யப்பதம்
பின்புவந்து தொழுகவென்று பேசிராம னேகவே
என்பணிந்த சிவனிடத்தி லேதமுன்செய் யநுமனும்
வன்புதங்கு மதுதவிர்க்க மாதவம்பு ரிந்தனன் [௧௮]

உறக்கமும் புசிப்புமின்றி பொழிவில்கால மாதவஞ்
சிறக்கவேசெய் யநுமன்முன்பு தேவதேவன் வந்துசின்
மறப்பிலாத மனதிலுன்னும் வரமதென்கொ லென்றநுந்
துறக்கொணாத பாதகங்க டொலையுமாறு செய்யென [௧௯]

மருவுமிச் சிவத்துரோக மாய்வதன்ற தாயினுங்
கருவகற்றி ஞானநல்குங் கன்மநாச புரமதி
னிருமலச் சுயம்புலிங்கம் நிலவுமங்க ணேகியே
யொருமையுற்ற பூசைசெய்யி னுனதுபாவ மாற்றுவோம் [௨௦]

என்றப் பரம னெழுந்தருள விடர்தீர்ந் தநுமன் புனிற்றுச்சேய்க்
கன்றெப் பெனநெக் குளமுருகிக் கன்மநாச புரத்தணுகி
மன்றற் புனலங் கரநதியின் மகிழ்ந்து மூழ்கி யாலயத்துட்
சென்றப் பணிசெஞ் சடையானைச் சிந்தைகளிக்கப் பணிந்தேத்தி [௨௧]

பூசைக் கியைந்த வுபகரணம் பொருந்த வமைத்துப் புனிதமுட ன்
மாசைத் தவிர்ந்த வாகமத்தின் வழியே பூத முதலைந் தி
ஞசைக் களைந்து பத்தியுட ஞமுக் கரண மொருமையுற க்
காசைக் கறைக்கந் தரத்தூலக் கடவுட் பூசை கனிந்தியற்றி [௨௨]

ஒருவாத் தயில தாரையென வுமையாட் குவந்த மணவாள ன்
றிருவார் கமலச் செழுஞ்சரணந் தியானித் திருக்கு மேல்வையினி ன்
அருவா யுருவா யகண்டிதமா யடியார் நினைத்த வரங்கொடுக்கு ம்
பொருளாம் பரம சிவனந்தப் புனித லிங்கத் திடைத்தோன்றி [௨௩]

கங்கை நதியு மிளம்பிறையுங் கனிந்த பவளச் செழுஞ்சடையு ந்
துங்க நுதல்சேர் புண்டரமுஞ் சுடர்மூன் றெனச்சொல் லருள்விழியு ஞ்
சங்க மிலகு மணிக்குழையுந் தணியாப் பிறவி யிடர்தணிய ப்
பொங்கு கருணைத் திருமுகமும் புனிதா கமஞ்சொல் மலர்வாயும் [௨௪]

கய்யின் மழுவும் மறிமானுங் கண்டோ ரிதையங் கனிந்துருகு ந்
துய்ய திருமே னியிலழகுந் துலங்கு மணிமார் பணிநூலு ங்
கொய்யு மலர்மென் கருங்கூந்தற் கோல வளையாள் வலப்பாலு ஞ்
செய்ய சரண மறைச்சிலம்புந் திகழ வநும னெதிர்நின்றான் [௨௫]

கண்டான் பணிந்தா னிறைமேனிக் கவினு ரமுதைக் கண்ணின்முக ந்
துண்டான் களித்தா னுளங்கரைந்தா னுரோமஞ் சிலிர்த்தா னுடல்புளக ங்
கொண்டான் விழிநீ ரருவியினிற் குளித்தான் கொடிய வினையனைத்து ம்
விண்டா னென்னக் கூத்தாடி விழுந்தா னெழுந்தான் விளம்புவான் [௨௬]

பேதித்த பாச நீக்கும் பிஞ்ஞகா போற்றி யுள்ள ஞ்
சோதித்து ஞான நல்குஞ் சுந்தரா போற்றி கொன் றை
பாதித்தண் மதியஞ் சூடும் பராபரா போற்றி யென் று
மாதித்த புரத்தில் வாழு மமலனே போற்றி போற்றி [௨௭]

பணங்கொளா பரணு போற்றி பத்தருக் கெளியாய் போற் றி
வணங்கலர்க் கருளாய் போற்றி மாமறை முடிவே போற் றி
யிணங்குமுள் ளொளியாய் போற்றி யின்பவா ரிதியே போற் றி
குணங்குறி கடந்தாய் போற்றி குற்றமும் பொறுப்பாய் போற்றி [௨௮]

கருணையங் கடலே போற்றி காமனைக் காய்ந்தாய் போற் றி
குருவெனுஞ் சிவமே போற்றி கோல்வளை பாகா போற் றி
பொருவரும் பொருளே போற்றி போதபூ ரணனே போற் றி
யிருமையுந் தருவாய் போற்றி யெம்பிழை பொறுப்பாய் போற்றி [௨௯]

போற்றி யெனவே துதித்துமுனம் புரிந்த பிழையை மனத்தெண் ணி
யாற்ற வுடலம் நடுநடுங்கு மநுமன் றனது முகநோக்கித்
கீற்று மதியும் வாளரவுங் கிடந்துஞ் சிறிதும் பகையின்றித்
தோற்றும் பவளத் திருச்சடிலத் தூயோ னிதனை யருள்செய்வான் [௩௦]

காட்டு மறிவாய் நித்தியமாய்க் கதியா யகண்ட பூரண மா
யீட்டு பாச பசுஞான மெட்டி யுணரா வின்புருவா ய்
வாட்டு கொடிய மலப்பகையாய் வாழு நமக்குச் சராசரங் க
ணூட்டு வடிவா மித்தன்மை ஞான நயனத் தாரறிவார் [௩௧]

பொருவில் சாத கருமறிதற் பொருட்டு நாத விந்துவெ னு
முருவ மாகுஞ் சிவலிங்க வுருவிற் சிறப்பா யுறைந்தனமா ற்
றெருளவ் விலிங்கந் தனைத்தாரு சிலைமண் மணலா தியினு லு
மருளினோடு மமைத்த வற்றி லடியார் வழிபா டியற்றிடுவார் [௩௨]

தாழ்ந்த கிருமியாயினுநாஞ் சாரு மிலிங்கந் தனைவிருப்பா ற்
சூழ்ந்து பூசை செயினயன்மால் தொடர்தற் கரிய பதமளிப்போ ம்
வாழ்ந்த வயன்மா லிதனையவ மதித்தா லவரை வெங்கிரைய ம்
வீழ்ந்து வருந்துங் கிருமியென விதிப்போ மெனநீ மதிப்பாயே [௩௩]

விரிந்த பாவம் பலகோடி விதமா மவற்றுண் மிகக்கொடி தே
புரிந்த சிவத்து ரோகங்கள் புகலு மவற்று ளறக்கொடிதா ந்
தெரிந்த விலிங்கந் தனைச்சேதஞ் செய்த லாமத் தீமையு னை
யிரிந்த மதியாற் செய்தவுனக் கெண்ணி னரக முறுமெனினும் [௩௪]

சாருந் தவங்கள் பலபுரிந்தித் தலத்தி லணைந்தே யெமைப்பூ சை
யாருங் கருத்தி னொருமையுற வன்பி னுடனே புரிதலினு ற்
சேரும் பிழையெல் லாம்பொறுத்தோந் தீமை யகன்ற துனக்கின் னு
மோரும் வரங்கே ளென்ப்பரம னுரைத்தா னநும னுவைக்கின்றான் [௩ ]

தானந் தருமஞ் செபம்பூசை தவங்கள் விரத யாகமு த
லான வறங்கள் புரிவோருன் னன்ப ரலரே லவையவ மா
மீன விருத்தி செயினுமன்பர்க் கெளிதாம் பரம சுகமென்று ல்
ஞான முதல்வ வுனதுபதம் நாடும் பரிவே வேண்டுவனல் [௩௬]

இன்ன வரத்தை யநுமனரு ளிறையோன் றிருமுன் னிசைத்திட லு
மன்ன வரத்தை யுவந்தருளி யரனுர் மறையப் பெருங்கரு ணை
தன்னை மதித்து மனமுருகித் தாழ்ந்து வணங்கி யதிசயித்து ப்
பின்னை நினைத்த வரந்தரும்ப் பெரிய தலத் ‡ தீ சுரதிசையில் [௩௭]

---

‡ இத்தலத்தின் ஈசானபாகத்தில் அநுமாரால் ஸ்தாபிக்கப்பட்ட தலத்தின் பெயர் (திருக்குரக்குக்கா) சுவாமிபெயர் குண்டலகருணேசுவரர், அம்மன் பெயர் ஏலாசவுந்தரி.

தனது பெயராற் சிவலிங்கந் தாபித் திலங்குங் கூடதிசையி ல்
வனச மலரும் பெருந்தீர்த்தம் வகுத்துப் பூசை கனிந்தியற்றி ப்
பனக மணிந்தா ரருள்பெற்றுப் பலநா ளந்தத் தலத்திலிரு ந்
தனமு னுயர்த்த பிரமனுல கணைந்தே யநும னினிதிருந்தான் [௩அ]

அநுமச் சருக்கம் முற்றிற்று—ஆகச் செய்யுள் உ௪௩

## விசித்திராங்கதச் சருக்கம்.

அநும னவன்பிழை தீர்ந்திடப் பூசைசெய் தருள்பெறுங் கதையீதா ற்
றநுவி லன்பிலா தரனருள் ஞானமே தலைமையாம் பொருளென் றே
யுனுமெ யன்புள முனிவர்கா ளின்னுநா னொருகதை மொழிகின் றே
னெனுமு னந்தண ருய்ந்துளோம் யாமென வினிதுரைத் திடுஞ்சூதன் [க]

ஓங்கு வண்புகழ்ச் சிந்துதே யத்தினை யொருகுடை நிழற்செய் தே
தாங்கு திண்புய னற்சரித் திரனெனுந் தண்மதிக் குலவேந் த
னுங்க வன்பெயர் காரணப் பெயரென வறம்புரி திறம்பூண்டோ ன்
தேங்கு மன்பினி னிதிக்கிறை புகழ்பவன் றிசைபெறு மிசையாளன் [உ]

அந்த மன்னவ னெடும்பக லியற்றிய வருந்தவப் பயனா லே
வந்த நன்மகன் விசித்திராங் கதனவன் மனுநெறி முறைகுன் றா
துந்து தெண்கடல் மருங்குடுத் தகன்றவிவ் வுலகினை யினிதாள்வா ன்
சந்த மன்னிய வனமுலைச் சுசீலையாந் தளிரிய லவன்றேவி [௩]

ஆய வொண்டொடி பூண்முலைப் போகமவிண் ணமுதென நனிமாந் தி
நேய மொன்றியிவ் வுலகினி லரசியல் நிகழ்த்தியே வருநாளி ல்
மாய னுண்டுமிழ் மண்ணெலா மகிழ்வுற வரைப்புய மிசைத்தாங்கி ச்
சேய தென்புலத் தவர்கட னிறுக்குநற் சேய்பிறந்தில தந்தோ [௪]

பொருளி லாதவ ரெழிலுறு மிளமையும் பூதலத் துயிர்க்கெல் லா
மருளி லாதவர் புரியுமெய்த் தவங்களு மாரருள் வடிவா ன
குருவி லாதவர் கல்வியுங் கற்பிலாக் கோதையர் மனைதானு ம்
மருவி லாதவெண் முல்லையுஞ் சேயிலான் வாழ்க்கையும் பழுதாமால் [௫]

பூதி யற்றவர் நெற்றியும் பொய்யுரை புகலுவா னுரைதானு ஞ்
சாதி யற்றவர் செயும்பெரு வேள்வியுந் தனமிலா மடமாது ம்
நீதி யற்றவர் தேயமு மாலயம் நிலைபெறா நகர்தா னு
மாதி டத்தினல் லறிவுறுஞ் சேயிலான் வாழ்க்கையும் பழுதென்றே [௬]

உன்னி நெஞ்சிடைத் துயருழந் தரசனு மொளியிழை மனையாளு ம்
பன்னு கின்றபல் விரதங்கள் பண்ணினர் பண்ணிய பயனா லே
யன்ன மென்னடைக் கருங்குழல் வெண்ணகை யவள்மணி வயிற்றா டே
யின்ன லின்றிய கருப்பம்வந் துற்றதிவ் விநிலந் தொழத்தானே [எ]

அரச னுண்மகிழ் வெய்தின னட்டவ ரவனினு மகிழ்வானா ர்
விரைசெய் மென்குழல் புளிஞ்சுவைக் காய்கனி விரும்புமூண் டியளாகி க்
கருது மின்னியற் பவளவாய் வெளிறிமைக் கண்ணிணை குழிவா க
வரையின் விம்மிய முலைநுனி கறுத்திட வயிற்றையா லிலைவெல்ல [அ]

கரு வமைந்திடு குறியெலா நாடொறுங் கண்டொரு பதுமாத ம்
பெரிது சென்றபின் மகவுயிர்த் திலளினிப் பெறும்பெறு மெனவெண் ண
வருட மைந்தினோ டைந்திரண் டாகியு மகவுதித் திலதா லே
யிரு தடம்புயத் திருநில மேந்திய விறைவனு மடமாதும் [கூ]

உலகி லில்லதோ ரற்புத மாகியிவ் வூழ்வினை யுறலா னோ
மலகி னல்விர தங்களை யாற்றிடி னடைந்திடும் பயனீ தோ
நிலவு மிவ்வுல கினைப்புரந் தருளிய நீதியிற் றவறுண் டோ
கலையி லாமைசொப் பனமென வாகுநாங் கருப்பமுற் றதுதானே [க0]

கருப்ப மேவியு மகப்பெற லின்மையாற் கடுந்துய ரினையெய் தி
விருப்ப மாமர சுரிமைநல் லெழிலொடு வியன்பொருள் பலவெல் லா
முருப்ப மார்தரு பாலையிற் பெருமழை யொக்குமென் றுளத்தெண்ணி ப்
பொருப்பு நேர்புய னமைச்சன்மேல் வையகப் பொறையினை யொருங்குய்
[த்தே—கக]

முந்து தீவினை புரிதலால் வந்தவிம் முடிவிலாத் துயர்தன் னை
யெந்தை யீசன்மெய்த் தலங்களிற் சென்றுநீக் கிடுவெனென் றுளநேர்ந் தே
சிந்து தேசம தகன்றருந் ததியெனுஞ் சேயிழை யுடன்போ த
வுந்து வார்திரைக் கங்கைசூழ் காசியி லுற்றர னடிதாழ்ந்தே [கஉ]

மல்லி கார்ச்சுனந் திருப்பதி வதரிகா வனந்திருச் சயிலஞ்சீ ர்
நல்ல காளத்தி வீரரா கவஞ்செக நாதநற் பிரயா கை
சொல்லு பாண்டுரங் கங்குருக் கேத்திரஞ் சூழிமா மலைகாஞ் சி
யல்ல னீக்குகே தாரசா ளக்கிரா மாசல முதுகுன்றம் [கங]

அருணை காழிபுள் ளூர்மறைக் காடுசா யாவனந் திருவாரூ ர்
திரிசி ராமலை கரிவனம் மதுரைரத் தினகிரி கடவூரு ம்
வருசு வேதநல் வனங்குட மூக்கிடை மருதொடு வழுவூரு ந்
தெருள் செனூர்த்தனங் குமரிரா மேச்சுரந் திருவையா றவிநாசி [கச]

அரங்க மெய்ப்புகழ்த் தஞ்சைமா யூரமே யாதியாந் தலந்தோ று
முரங்கொள் பத்தியிற் சென்றுசென் றரனடிக் குவப்பொடு பணிசெய்தும்
வருங் கருப்பொறை யுயிர்த்திடாத் தன்மையால் வாட்டமுற் றிருவோ ரு
மிரங்கி யுத்தம மானபுன் கூரினி லெய்தியன் பொடுதொழுந்தே [கடு]

விளம்பு மப்பதிக் கொருபுடை நின்றதோர் வேம்படி நிழல்சார்ந் தே
யுளங்கொ தித்தன ரேய்ந்தபங் கயமென வொளிமுக மிகவாடிக்
களங்க முற்றவெண் பளிங்கென மெய்யெழில் கருகின ரமர்கா லே
வளம் படைத்தவிண் ணமுதென வுடலிலா வாக்கெழுந் ததுவானில் [கசு]

உறுதி யாயிது கேளுமி னிருவிரு முறுதுயர் விடுவீரா ல்
மறுவி லாததோர் யூதிகா வனமெனும் வளம்பதி யணித்தாகு ங்
கூறுங் நீவிரைங் கரனதி படிந்தருள் குலவிய சிவலிங்கத்
திறுதி சேர்கலாப் பூசனை செயிலுறு மெண்ணிய வரமென்றே [கஎ]

எழுந்த வாக்கினை யுணர்ந்தலை கடலுள்வீழ்ந் திறப்பவர்க் கொருதோ ணி
யழுந்தி டாதுவந் துதவிய தெனநமக் கரனளித் தனனென் றே
விழுந்து பூமியிற் பணிந்துட னடுக்குற விம்மிதத் தினராகிச்
செழுந்தண் வார்பொழி லாதவ புரியினிற் சென்றனர் விரைவோடும் [கஅ]

ஆண்டு வந்திடர் போனவர் திரைபொரு மைங்கர னதிமூழ்கி ப்
பூண்டு ருத்திர மணிதிரு நீறுமெய்ப் பூசிநித் தியஞ்செய் தே
வேண்டு நற்கதி தருஞ்சிவ லிங்கமுன் வீழ்ந்திறைஞ் சினர்மின் போ
னீண்ட செஞ்சடை யீசனைப் பூசனை நிகழ்த்தினர் விதியாலே [ககூ]

சகத்து மன்னவன் விசித்திராங் கதனுரை தருதுதி பலவா க
நிகழ்த்தி நித்தலும் பசியினு லலறுசேய் நிலையினை யுணர்ந்தன் னை
யகத்தி னன்பினுன் மூலக்கணின் றெழுகுபா லாமெனச் சிவலிங்கத்
துகப்பி னோடுவந் துதித்தனன் கருணையே யுருவமா யுறுமீசன் [உ0]

திரைநதி மதியந் திகழ்சடை முடியு ம்
புரைதவிர் தவளப் பொடிபுனை நுத லு
மிருண்மல மகல விலகிய விழி யு
முரைபெறு கருணை யொழுகிய முகமும் [உக]

கடுவிட மிடறுங் கனன்மழு மறியு ங்
கொடுமுடி யசலங் கொடுபுரி சிலை யு
முடுகிய புலியின் முதிரத வுடைய ம்
படவர வணியும் பரிபுர வொலியும் [உஉ]

செங்கயல் விழியுஞ் சிறுபிறை நுதலு ம்
பங்கய முகமும் பருவரை யனை ய
கொங்கையு முடைய கோல்வளை வலமு ந்
தங்கிய பரமன் றனைவிழி குளிர [உங]

கண்டிரு சரணங் களிவொடு தொழு தே
மண்டிய புளக மலர்தர வுடலி ற்
றண்டுளி நயனந் தரமொழி குழ ற
வெண்டிசை யுடைகொ ளிறைபுகழ் மொழிவான் [உச]

மனைமக வாசை மதுநனி பருகி ப்
பினையர சாண்மைப் பெயர்தொட நிதிய ந்
தனையுறு களியாற் றருவிழி குரு டா
மெனையினி யாள்வா யிறையவ சரணம் [உரு]

பிணிகளி னிடமாய்ப் பிரியுடன் மனை தோ
றெணிநுழை யெளியே னினிநுழை யா தே
யணிதரு பரவீ டதிலுற வருள்வா ய்
மணிவிடை மிசையே வருமிறை சரணம் [உசு]

மருளுறு மூல மலவிட மயலை ப்
புரிதர வினையென் பொருவளி யெறிய க்
கரையறு மாயைக் கடலிடை மூழ் கி
வெருவின னெனையாள் வேதிய சரணம் [உஎ]

என்றிவை புகழு மிவன்முன மிறை ஞ
னின்றனி மனைவி நிகரில ஞு கி
யொன்றிய வறிவு முயர்பெரு நிதியு ந்
துன்றிநல் லரசர் தொழுமவ ஞகி [உஅ]

எம்பணி விடையு மியலுறு பெரியோ ர்
தம்பணி விடையுந் தகுமுறை செய் தே
யும்பரி னுயரு மொருதிரு மக னை
யம்புவி மகிழ வழகொடு பெறுவாள் [உகூ]

கற்புடை மனையாள் கான்முளை யுட னே
யற்பொடு மருவி யரசிய னிறுவி ப்
பொற்புறு பலநாள் போனபி னெமதா ம்
விற்பொலி யுலகின் மேவுவி ரென்றே [௩0]

கண்ணுதல் மறையக் கண்டபி னர ச
னுண்ணனி மகிழ்வோ டுறைதரு பொழுதி ற்
புண்ணிய மதிமால் புகர்குரு ரா கு
நண்ணிய வுச்ச ராசியி னணுகா [௫௧]

சுடர்சனி குளிகன் சொலுசில மக னு
முடனுற வாகி யுயர்பதி னொன் று
மிடமதி லுறவே யினிய சுசீ லை
கடன்மணி யெனவோர் கான்முளை யீன்றாள் [௫௨]

முன்னமர் புதல்வன் முகதரி சனையா ற்
பன்னிரு வருடம் பயில்கரு வுதி யா
வின்னலு நகர்தொறு மெய்திய துய ரு
மொன்னல ரிகழ்வு மொக்க வகன்றாள் [௫௩]

பிறவியி னுடனே பிணிபடு மிடிய ன்
மறுவறு சிந்தா மணிபெற லென்ன ச்
சிறுவனை நனிபெறு திண்புய மன் ன
னிறுதியி லுவகை யெனுங்கடல் மூழ்கி [௫௪]

அம்புய மலர்தரு மைங்கர னதி யி
னன்பொடு மூழ்கின னுண்மறை யவர்பா ற்
செம்பொனு மொளியொடு திகழ்நவ மணி யு
மிம்பரின் மலையென வியல்புட னுதவி [௫௫]

பட்டு முதற்பல பைந்துகில் விதமு ங்
கட்டு பரித்திரள் கார்மத களி று
மட்ட யுதத்தொகை மன்னிய தேரு ஞ்
சிட்டர் தமைத்துதி செய்து கொடுத்தே [௫௬]

கமலை யெனத்தகு கன்னியர் தான ம்
விமல முறும்பசு வெள்விடை தான ந்
தமன மடக்கிய தாபதர் மறையோர் க்
கமுதென வின்சுவை யாமன தானம் [௫௭]

அன்புட னுதவியவ் வரசன் விரைந் தே
மின்பொலி சடைமுடி வேத துரங்க ன்
முன்பு பணிந்திடர் மோசன மா ன
தின்ப மருந்தே யென்று புகழ்ந்தான் [௫௮]

வெண்ணி லாமதி குலத்தினி லுதித்த விசித்தி ராங்கத னெனுந்திறல் வேந்தன், றண்ணி லாவிய முடிப்பிழை பொறுத்த சங்க ரர்க்கெழி லாலய மியற்ற, வெண்ணி யேதமில் சிற்பநூல் வழியே யிலங்கு மேருவி னுயர்ந்த பொற்சிகரம், பண்ணி யேழ்நிலை குலவுகோ புரங்கள் பதும ராகநன் மணி கொடு குயிற்றி. [௬௧]

நிலவு வித்துரு மத்தின லுயர்தூ ணிறுத்தி நீலவொண் போதிகை சுமத்திக் குலவு வச்சிர வுத்திரம் பொருத்திக் கொடுங்கை பாசொளி மரகதத் தமைத்தே, யலகில் புட்பரா கத்தைமேற் பரத்தி யார மாலிகை யணிபெற நாற்றி யிலகு சித்திர நவமணி தெளித்திட் டெழுதி யின்னெழின் மண்டப மியற்றி

சீத வெண்டிரை முழங்குபாற் கடன்மேற் றிருவு மாலுமுற் றிருந்தெனத் தரளக், கோதில் வெண்சுதை தீற்றுமே னிலையிற் குலவு மின்னொடு கொண்டல்கண் படுக்கத், தீதில் செம்பொனன் மணிகளா லிழைத்துச் சேணுறுந்திரு மாளிகைச் சுற்று, மோது சந்திர காந்தமண் டபமு மொளிரும் வெள்ளிமண் டபங்களு முஞற்றி. [௬௧]

வான மித்துணை யெனவளந் தோங்கு மதில்கள் பேரெழில் வளமுற வமைத்தே, யான நற்றிசை நான்கினும் வாயி லமைத்து விண்ணவர் மண்ணவர் பிலத்தோ, ரீன மற்றருள் பரகதி பெறுவான் யாரும் வம்மினென் றினிதழைப் பதுபோ, லூன மற்றசை கின்றபல் கொடிக ளொலிசெய் பன்மணி யுடனுற வமைத்து. [௬௨]

அரிய தொன்மறை யாகம முணர்ந்த வாதி சைவர்க ளமருநற் றெருவு முரிய நான்மறை வேதியர் தெருவு மோங்கு மாமனு நூல்வழி புரக்கும் பெரிய மன்னவர் தெருவும்வா ணிபத்திற் பிறழ்ச்சி யின்றிநா டொறுமிக வளர்ந்து, விரியு நன்னிதி வணிகர்தந் தெருவும் விளங்கு கின்றவே ளாளர் தந் தெருவும். [௬௩]

பிறங்கு சீரனு லோமர்தந் தெருவும் பிரதி லோமர்கள் வாழ்பெருந் தெருவு மறஞ்செய் சாலையு மருந்தவர் மடமு மாகமம்படித் துறைதரு கிடையுங் கறங்கு பல்கலைக் கழகமு மரங்குங் கவின்கொ டெற்றியுங் காமரு பொதுவு நிறங்கொள் வண்டின முரன்றும் பொழிலு நிறைந்த பன்மலர் நந்தன வனமும். [௬௪]

வனச வாவியும் பொய்கையுங் கிணறும் வளஞ் சிறந்திட முறைமையின் வகுத்தே, கனக மாமணி முதலவாம் பொருள்கள் கனிந்து வேண்டுவ வவரவர்க் குதவிப், பனக மாமணி யார்பிழை பொறுத்த பரமர் கோல்வளை பாகர்தம் பூசைக், கினிய நீணிதி விளைநில முதலா வெவையு மன்பொடு நிலைபெற வுதவி, [௬௫]

மன்னு சித்திரை மதியினிற் சோமன் வளரும் பூருவ பக்கமான் றலையிற்
பன்னு முத்தம விடைக்கொடி யேற்றிப் பத்து நாளிரு போதினும் பரமன்
சொன்ன முத்தமார் வீதியி லருளாற் சூழ்ந்து லாவருஞ் சீர்விழா வியற்றி
யுன்னு நித்தனை மித்திய பூசை யோகை யோடுசெய் வித்தவ னுறைந்தான்

சுதை நிலாக்கலைப் பிறைவளர் வதுபோற் சுசீல தன்மக னுடொறும் வள
ர்ந்தே, யிதைய நாடுறுந் தலைமனு வேத மியலு நற்படைக் கலத்தொழில்
பலவுந், துதை மதாசலந் துரகத மான்றேர் தொன்மை நூல்வழி நடத்
துறு தொழிலு, முதைய சூரிய னெனப்படித் துயர்ந்தா னோங்கு பேரெழி
லுருவுகொண் டனையான். [சஎ]

இனைய மைந்தனற் குணஞ்செய னோக்கி யீன்ற ஞான்றினும் பெரிதுவந்
தெழிலாற், புனையு மம்பொன்மா மணிமுடி சூட்டிப் பூமி பாரமப் புதல்வு
ன்மேல் வைத்தே, நனை யிரும்பொழில் சூழுமா தித்த நகரி னுள்பல விருந்
துட லகற்றி, மனைவி யும்புகழ் விசித்திராங் கதனு மாது பாகனு ருலகில்
வீற்றிருந்தார். [சஅ]

அந்த மன்னவ னரகிளங் குமர னளவி னுளெழி லாதவ புரத்திற், சிந்தை
யன்புட னிருந்து மெய்க் கருணைச் சிவன் புரிந்தருள் வரம்பல பொருந்தித்
தந்தை முன்புறை சிந்துநா டணைந்தித் தலத்து முக்கியந் தினமெடுத் தியம்
பி, யுந்து தெண்கட லுலகுயிர் மகிழ வோங்கு நீதியிற் புரந்தினி திருந்தான்

ஓங்கு மாதவ புரியின்மான் மியத்தை யுள்ள வாறெலா முரைத்திட வடங்கா
தேங்கு மாதவத் துறையுறை முனிவீர் தெரிந்த வாறுரை செய்தன னென
ச்சீர், தாங்கு சூதனங் கருளிய பொழுதிற் சடில மாமுடி துளக்கி யற்புத
ராய்ப், பாங்கு ஞானமா முனிவர ரெவரும் பரவ சத்தின ராகிவாழ்ந்
திருந்தார். [ரு0]

கற்றவர் விருப்புறு கருப்பறிய லூ ரி
னற்கதை படிப்பவர் நயப்பொருள் சொல்வார்க ள்
பொற்செவி நிறைப்பவர் புகழ்க்கவிஞ ராகி ப்
பற்பல நிதித்தொகை படைத்தவனி யாள்வார் [ருக]

மக்கண்மனை சுற்றமு மதிக்கமிக வாழ்வ ர்
தக்கவுட லுற்றபிணி தத்துமில ராவ ர்
தொக்ககர கத்துயர் தொடைத்தினிமை சேர்வ ர்
நெக்குருகு பத்திக ணினைத்தவா மாவர் [ருஉ]

இக்கதை படித்திடு மிடத்திதழி மா லை
தக்கமுடி வைத்தவிறை சத்தியொடு மே வு
மக்கதை தனைத்தின மருச்சனைசெய் வார்க ள்
முக்கணிறை மெய்ப்பரம முத்திபெறு வாரே [௫௩]

வேத முறையா கமமார்க்கம் வெல்க மறையோ ரிஞ்செழிக் க
போத வமுதந் தருசுரபி பொலிக புயனன் மழைபொழி க
நீதி யரசர் நெறிமல்க நிலத்தோர் தரும வழிச்செல் க
வாதி யரனே பொருளெனுமெய் யடியார் கூட்டம் விளங்குகவே [௫௪]

சீல நிறையுந் தானிகருஞ் சிவவிப் பிரருந் தினம்வா ழி
கோல வளைமா துமைவாழி குற்றம் பொறுத்த சிவன்வா ழி
ஞால மகிழு மாதித்த நகரம் வாழி யந்நகர்ச் சீ ர்
சால விளங்கும் புராணமெனும் தமிழும் வாழி நிலைபெறவே [௫௫]

விசிததிராங்கதச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் பாயிரமுள்படச் செய்யுள் [௨௯௮]

## புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கோலவளை நாயகி சமேத குற்றம் பொறுத்தவர் துணை

மெய்கண்டதேவன் திருவடி வாழ்க

ஸ்ரீஞானசம்பந்த குரவே நம:

# திருக்கருப்பறியலூர்த் தலபுராணம்.

## அரும்பதவுரை.

1 ஆகாரம்-வடிவு. வேதாந்தமலர்—உபநிடதமாகிய புஷ்பம்.
2 பாசவிருள்—ஆணவம, கன்மம்-மாயையென்னு முப்பாசங்களான் வந்துறும் அஞ்ஞானம்.
3 தத்-அது, தொம்-நீ அசி-ஆனாய், மதிமுனம்—சந்திரனுக்கு முன்னே, அணிவாருழி-அழகுபொருந்திய பெரிய சமுத்திரம்.
5 பரநாதம்-சிவத்துக்கிருப்பிடமாகிய ஞான ஒலி, உரன்—வலி.
6 தவனம்—தாகம், நந்தவன்—சங்குடைய விஷ்ணு, நந்தவன்னம்—சங்கு நிறம்.
7 வள்ளி-வள்ளி நாயகியாகிய கொடி, சந்தானம்—ஐந்தருவிலொன்று, தேவதந்தி-தெய்வயானை, பதுமராகமலை—சிவப்புமலை.
8 அமண்—சமண், மானி-மங்கையர்க்கரசியார், அமைச்சு—மந்திரியாகிய குலச்சிறை நாயனர், அகமுளரி-உளத்தாமரை, தாரகை—உடுக்குலம், பதிகஒளி—தமிழ்வேதமாகிய பிரகாசம்.
9 மல்—வலி. மாயாபேதமில்லாமல்-மலபரியாகமுண்டாக, ஞானத்து—சத்திநிபாதமுண்டாக.
10 பணி-ஆபரணம் பாம்பு, பரவை-பரவை நாச்சியார் சமுத்திரம், முறி—அடிமைச்சீட்டு, பயம்—தண்ணீர், கடனுக—முறைமையாக.
11 மாடு—பொன், வாசி-குதிரை, வழுதி—அரிமர்த்தன பாண்டியன், மந்திரத்தில் வாசிதனைப் பெருக வாங்கி—சகர்ப்ப பிராணுயாமஞ்செய்து.
மந்திரம்—குதிரைக் கூட்டம், வசி—சத்திசிவ அக்கரம், இது மகாகாரண பஞ்சாக்கரம்.
12 காதிடும்—துன்பந்தரும்.
13 சாலோகாதி நான்கும்—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், பெற-பெறும்பொருட்டு சரியைமுதல் நான்கும் — சரியை, கிரியை, யோகம், ஞான முதலிய நான்கிலும், வழாது—தவறாமல், எணவகையர்-எட்டு பிரிவினையுடையவராய்
14 மாயைப்பதுமங் கூம்ப—மாயையாகிய தாமரைமலர் குவிய, குமுதம்—செவ்வாம்பல்.

### புராண வரலாறு.

1 பொதுளி—நெருங்கி, சோமலதை—வேள்விக்குரிய ஓர்கொடி
2 முக்குறும்பு-காமம்வெகுளி மயக்கம்.
3 அரணி-தீக்கடைகோல், பரவீட்டில் விழிப்போர்-சீவன்முத்தர்.
8 பிரபை—ஒளி.
9 மூன்றுந் துன்பம்—ஆதிதெய்வீகம், ஆதிபௌதீகம், ஆதிஆத்மீகம், உததி-சமுத்திரம்.
11 போனம்—போனகம், உணவு, மலதிமிரம்—அஞ்ஞானவிருள்.
12 இலவம்—இலவம் பூ.

### தலச்சருக்கம்.

1 தாரம்—குளிர்ச்சியினையுடைய, ஆம்—நீர்தங்கிய, அலை—கடலினிடத்தே வராநின்ற, தாரம் ஆம்-பிரணவவடிவமாகாநின்ற, தேன்-தேனே, உகு-உருக்கின்ற, அம்-அழகிய, மல்லை-வளத்தைச்செய்கின்ற, தாரம்--மனைவியாகிய, மா-இலக்குமிக்கும், மல்-கூத்துக்கும், ஐ-தலைவனை, மாதவனும், தாதை-பிரமனும், அறியொணு-அறியமுடியாத, தாரமாமலை-வெள்ளிமலை.
2 அகம்—மனம், உன்—நினைக்கக்கூடிய, வரை—மூங்கில், மனகவரை—மனத்தின் பிரிவை.
3 கணிச்சிகரம்—மழுவினது ஒளி.

4 கரு—நிறம், பறியல்—பொன், ஊர்—தொடை. பசலை—பசுமை, கரு—கருவை பறியல்—உயிர்த்து, ஊர்—ஊர்ந்துசெல்லுகின்ற (சகருசலையுடைய), கருவாங்-கருவாயிருந்ததை, காதலித்த—விரும்பிய.
5 கல்—மலை, ஐவனம்-மலைநெல், கமலமன்னுமைஎல் - தாமரைநாயகனாகிய சூரியன், ஐவனம்—அழகிய வனம்.
6 உழை—மான், வேழம்—யானை, அரி—நெற்கதிர், வை—வைக்கோல், களம்—இடம், கவின்-அழகு, கண்—இடம், சந்து—தாது.
10 அரைக்கணம் — அரை நொடிப்பொழுது.
14 கோல்வளை—அழகிய வளை
15 சிவாயம்—வாட்போக்கி
18 காழி—சீர்காழி
19 யூதிகம்—காட்டு முல்லை, பச்சிமக்காழி—மேலக்காழி
21 கஞ்சுகிநாதன்—சட்டைநாதர்
22 ஓதனம்—சோறு
23 கவுசிகம்—பட்டுவஸ்திரம்
24 கருனை-பொரியல், நேயம்-நெய், குய்—தாளிதம்.
28 குடகடல்—மேற்குசமுத்திரம்
29 மலயம்—பொதியமலை
30 விரகு—அறிவு
32 பாதவம்—மரம்
33 அசலம்—மலை, தாரகம்—பிரணவ மந்திரம்.

## தீர்த்தச் சருக்கம்.

1 ஒருக்கி—ஒருப்படுத்தி, திரிமலம்-ஆணவமலம், கன்மமலம், மாயாமலம்.
2 நிம்பம்—வேம்பு
4 பாடலம்—பாதிரி, இலஞ்சி மகிழ், புரசு—பலாசம், கரவீரம்—அலரி, இதழி-சரக்கொன்றை, தளவு—முல்லை.
12 படிரம்—சந்தனம்,
16 உபாயம்—தந்திரம்
17 கட்டுரை—உறுதி
21 கவ்வியம்—பிதுர் சம்பந்தமாயிடப்படும் பிண்டங்கள். அவ்வியம்-தேவர்களுக்கு அக்கினி முகமாயிடப்படும் அவிசு நெய் முதலியன.
30 நிராமயர்—நோயற்றவர்.
32 உட்க—வருந்த
38 தப்புவிதி—கெட்டவழி, படிற—ஒழுக்கமில்லாதவனே.
40 கொள்கலம்—பாத்திரம்.
41 புரீடம்—மலம், சுரை—கள்ளு, சோரி—இரத்தம்
42 புலைஞர்வாடி—பறைச்சேரி.
44 தொழுநோய்—குட்டநோய்.
48 கன்னி—அழியாத.
49 துனி—துன்பம்.
51 தோம்—குற்றம், ஏமுறும் இறுமாப்பு.
57 மண்டு—நெருங்கிய, மண் பூமி, தலை—இடம்.
58 பூருவம்—கிழக்கு.
60 காமமுதலறுபகை-காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்.

## இரத்தினகிரிச் சருக்கம்.

1 ஆர்த்தி—துன்பம், ஓர்த்து—தெரிந்து.
2 உரகேசசேடன்-ஆதிசேடன், எழுசலம்—கைலை, இமையம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி.
3 குடிலம்—வஞ்சகம், சுருளுதல்.
4 பொலாக்கந்தம்-துர்க்கந்தம், யிடும்பை—துன்பம், தீயர்-கெட்டவர்
5 உளார்—உள்ளார், குணம்-கயிறு.
7 கணம்—கூட்டம், ஓசை—ஒலி, பகிரண்டம்—பெரிய அண்டங்கள். கூடம்-உச்சி, சண்டவலி-மிகுந்தவேகம்.
9 வாதம்-காற்றுக்குள்ள ஒருநோய், அசதி—சிரிப்பு, சோதனைவசனம்-சோதனையாயுள்ளவார்த்தை, காசு—குற்றம்.

11 கோடு—முகடு.
15 பின்னல்—தொடர்பு.

## முனிவரர் பேறுபெற்ற சருக்கம்

3 அனுபவங்—சுகபோகம், குருவருள்--பரமாசாரியனுடைய கடாக்ஷம், தனுமுதலசத்தென-தனுகரண புவன போகங்கள்முதலியன அசத்துப்பொருள்கள்.
6 உஞற்றல்—செய்தல்.
7 சாலம்—ஆச்சாமரம், செயலை—அசோகமரம், தீபமாமரம்-சோதி விருட்சம்.
17 ஒல்—விரைவுக்குறிப்பு.
18 இருமை—இம்மை மறுமை.
22 இந்திரகோபம் — தம்பலப்பூச்சி
பிராணன்-தசவாயுவிலொன்று.
28 அகல்—தகளி.
29 சில்லரி—பருக்கைக்கல்.
30 பரிவு—அன்பு.
35 பரை—சிற்சத்தி.
36 மதிமாலையன்—சந்திரனை மாலையாகத்தரித்தவன்.

## இராவணச் சருக்கம்.

7 பன்னி—மனைவி.
15 சிறுபுள்—தூக்கணாங்குருவி
பரிவு—துன்பம்.
16 எய்தா—பொருந்தாத.
17 ஆரஞர்—அருந்துயர்.
19 உலம்—கற்றிரள்.
20 உஞ்சு—பிழைத்து.

## அநுமச் சருக்கம்.

2 செல்—மேகம், சேது—அணை.
8 இரண்டு கன்னல்—இரண்டுநாழிகை.
9 சராசரம்—அசையும்பொருளும், அசையாப்பொருளும்.

16 கெழுமல்—அமைதல்.
21 புனிற்று—இளங்கன்றையீன்றபசு.
22 முக்கரணம்—மனம், வாக்கு, காயம்.
23 ஒருவா—இடைவிடாத.
31 நாட்டு—நிறுத்தப்பட்ட.
32 சாதகரும்—பழகுபவரும்.

## விசித்திராங்கதச் சருக்கம்.

2 நற்சரித்திரன்—இது இயற்பெயர்.
11 உருப்பம்—வெப்பம்.
14 கரிவனம்—திருவானைக்கா.
17 சோர்கலா—சோதலில்லாத.
18 விம்மிதம்—ஆச்சரியம்.
26 பிரி—பிரிகின்ற, உடல்-உடலாகிய, மனை—வீடு.
27 மூலமலம்—ஆணவமலம்.
32 நிலமகன்—செவ்வாய்.
36 அயுதம்—பதினாயிரம்.
40 ஆரமாலிகை—முத்துமாலை,
நாற்றி—தொங்கவிட்டு.
41 கண்படுக்க-நித்திரைசெய்ய, மின்-இலக்குமிக்கும், கொண்டல்-விஷ்ணுவுக்கும் (உவமை)
42 இத்துணை—இவ்வளவென்றளக்கும்படி.
44 அனுலோமர்—உயர்ந்த சாதி ஆணுக்கும் இழிந்த சாதி பெண்ணுக்கும் பிறந்தவர், பிறதிலோமர்--உயர்ந்தசாதி பெண்ணுக்கும் இழிந்தசாதி ஆணுக்கும் பிறந்தவர். கிடை—கூட்டம், கறங்கு—ஒலி, தெற்றி—திண்ணை.
46 மான்றலை—மிருகசிரிடம், நைமித்திகம்—விசேஷ பூஜை.
47 சுதை—அமுதம்.
50 தேங்கு—நிறைதல்.

அரும்பதவுரை முற்றிற்று.

உ

# திருக்கருப்பறியலூர்த் தலபுராணம்.

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 16 | ணிருத்தி | ணிறுத்தி. |
| 3 | 30 | முகூர்த்தமாக | மூர்த்தியாக. |
| 4 | 31 | பிறபை | பிரபை. |
| 5 | 32 | யறிவொணா | யறி[illegible] |
| 7 | 2 | ரெணிலென் | ரெ[illegible] |
| 13 | 16 | யாவரூ | யாவ[illegible] |
| 16 | 8 | பொருனினாற் | பொ[illegible]. |
| 18 | 4 | னருள | னரு[illegible] |